الَّذِيْنَ جَعَلُوا الْقُرْاٰنَ عِضِيْنَ ﴿٩١﴾ فَوَرَبِّكَ لَنَسْـَٔلَنَّهُمْ
الربع اَجْمَعِيْنَ ﴿٩٢﴾ عَمَّا كَانُوْا يَعْمَلُوْنَ ﴿٩٣﴾ فَاصْدَعْ بِمَا تُؤْمَرُ وَ
اَعْرِضْ عَنِ الْمُشْرِكِيْنَ ﴿٩٤﴾ اِنَّا كَفَيْنٰكَ الْمُسْتَهْزِءِيْنَ ﴿٩٥﴾ الَّذِيْنَ
يَجْعَلُوْنَ مَعَ اللّٰهِ اِلٰهًا اٰخَرَ فَسَوْفَ يَعْلَمُوْنَ ﴿٩٦﴾ وَلَقَدْ نَعْلَمُ
اَنَّكَ يَضِيْقُ صَدْرُكَ بِمَا يَقُوْلُوْنَ ﴿٩٧﴾ فَسَبِّحْ بِحَمْدِ رَبِّكَ وَكُنْ
ع ٦ مِّنَ السّٰجِدِيْنَ ﴿٩٨﴾ وَاعْبُدْ رَبَّكَ حَتّٰى يَاْتِيَكَ الْيَقِيْنُ ﴿٩٩﴾

## سُوْرَةُ النَّحْلِ مَكِّيَّةٌ وَّهِيَ مِائَةٌ وَّثَمَانٌ وَّعِشْرُوْنَ اٰيَةً وَّسِتَّةَ عَشَرَ رُكُوْعًا

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اَتٰى اَمْرُ اللّٰهِ فَلَا تَسْتَعْجِلُوْهُ سُبْحٰنَهٗ وَتَعٰلٰى عَمَّا
يُشْرِكُوْنَ ﴿١﴾ يُنَزِّلُ الْمَلٰٓئِكَةَ بِالرُّوْحِ مِنْ اَمْرِهٖ عَلٰى مَنْ يَّشَآءُ
مِنْ عِبَادِهٖٓ اَنْ اَنْذِرُوْٓا اَنَّهٗ لَآ اِلٰهَ اِلَّآ اَنَا فَاتَّقُوْنِ ﴿٢﴾ خَلَقَ
السَّمٰوٰتِ وَالْاَرْضَ بِالْحَقِّ تَعٰلٰى عَمَّا يُشْرِكُوْنَ ﴿٣﴾ خَلَقَ
الْاِنْسَانَ مِنْ نُّطْفَةٍ فَاِذَا هُوَ خَصِيْمٌ مُّبِيْنٌ ﴿٤﴾ وَالْاَنْعَامَ
خَلَقَهَا لَكُمْ فِيْهَا دِفْءٌ وَّمَنَافِعُ وَمِنْهَا تَاْكُلُوْنَ ﴿٥﴾
وَلَكُمْ فِيْهَا جَمَالٌ حِيْنَ تُرِيْحُوْنَ وَحِيْنَ تَسْرَحُوْنَ ﴿٦﴾

91. அவர்கள் எத்தகையோரென்றால் (இந்தக்) குர்ஆனைப் பல பாகங்களாக ஆக்கிவிட்டனர்.
92. ஆகவே, உமதிரட்சகன் மீது சத்தியமாக, அவர்கள் அனைவரையும் நிச்சயமாக நாம் (விசாரணைசெய்து) கேட்போம்_
93. அவர்கள் செய்துகொண்டிருந்தவைகளைப் பற்றி.
94. ஆகவே, உமக்கு ஏவப்பட்டதை(த் தயக்கமின்றி) நீர் அவர்களுக்குத் தெளிவாகக் கூறி விடுவீராக! இணைவைத்துக்கொண்டிருப்போரை புறக்கணித்தும் விடுவீராக!
95. (உம்மைப்) பரிகாசம் செய்பவர்களுக்கு (தண்டனை அளிக்க,) நிச்சயமாக நாமே உமக்குப் போதுமானவர்களாக இருக்கிறோம்.
96. அவர்கள் எத்தகையோரென்றால் _ அல்லாஹ்வுடன் (பொய்யாக) மற்றொரு வணக்கத்திற்குரிய (தெய்வத்)தையும் (இணையாக) ஆக்குகிறார்கள்; (இதன் முடிவைப்பின்னர்) இவர்கள் அறிந்து கொள்வார்கள்.
97. மேலும், (நபியே!) அவர்கள் (கேவலமாகக்) கூறுபவற்றின் காரணமாக உமது நெஞ்சம் கலக்கத்திற்குள்ளாவதை நிச்சயமாக நாம் அறிவோம்.
98. ஆகவே நீர் (அவர்களின் கூற்றைப் பொருட்படுத்தாது) உமதிரட்சகனின் புகழைக்கொண்டு துதிப்பீராக! இன்னும், சிரம் பணிவோர்களில் நீரும் ஆகிவிடுவீராக!
99. உமக்கு (யகீன் என்னும்) மரணம் வரும்வரையில் உமதிரட்சகனை வணங்கிக் கொண்டிருப்பீராக!

---

அத்தியாயம் : 16

## அந்நஹ்ல் _ தேனீ

வசனங்கள் : 128 மக்கீ ருகூஃகள் : 16

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. (இதோ) அல்லாஹ்வுடைய கட்டளை வந்துவிட்டது; ஆகவே, அதைப்பற்றி நீங்கள் அவசரப்படாதீர்கள்; அவன் மிகப் பரிசுத்தமானவன்; அவர்கள் இணைவைப்பவற்றை விட்டும் (மிக்க) உயர்வானவன்.
2. நிச்சயமாக அது (காரியம் என்னவென்றால்) "வணக்கத்திற்குரியவன் என்னைத் தவிர (வேறு எவரும்) இல்லை; (ஆகவே) என்னையே பயந்து கொள்ளுங்கள் என நீங்கள் எச்சரிக்கை செய்யுங்கள்" என்று தன் அடியார்களில் தான் நாடியவர் மீது, தன் கட்டளையினால் வஹீயைக்கொண்டு அமரர்களை அவன் இறக்கி வைக்கிறான்.
3. வானங்களையும், பூமியையும் (வீண் விளையாட்டிற்காக இல்லாமல்) உண்மையைக்கொண்டு அவன் படைத்திருக்கிறான்; அவர்கள் இணை வைப்பவைகளைவிட்டும் அவன் மிக்கப் பரிசுத்தமானவன்.
4. ஒரு துளி இந்திரியத்திலிருந்து மனிதனை அவன் படைத்தான்; (அவ்வாறு படைக்கப்பட்ட அவன் வளர்ந்து நிறைவு பெற்று விட்டு) இப்போது அவன் பகிரங்கமாகத் தர்க்கிக்கக்கூடியவன் (ஆக இருக்கிறான்).
5. மேலும், (மனிதர்களே!) கால்நடைகளை_ அவற்றை (உங்களுக்காக) அவனே படைத்தான். அவற்றில் உங்களுக்காக (குளிரைத்தடுத்துக்கொள்ளக்கூடிய) கதகதப்புண்டு. இன்னும், (வேறு) பயன்களும் உங்களுக்குண்டு; மேலும், அவற்றிலிருந்து நீங்கள் புசிக்கின்றீர்கள்.
6. நீங்கள் அவற்றை (மேய்த்து,) மாலையில் ஓட்டி வரும்பொழுதும், (மேய்ச்சலுக்காக) காலையில் ஓட்டிச்செல்லும்பொழுதும் அவற்றில் உங்களுக்கு அழகுமிருக்கிறது.

وَتَحْمِلُ اَثْقَالَكُمْ اِلٰى بَلَدٍ لَّمْ تَكُوْنُوْا بٰلِغِيْهِ اِلَّا بِشِقِّ

الْاَنْفُسِ ؕ اِنَّ رَبَّكُمْ لَرَءُوْفٌ رَّحِيْمٌ ۙ﴿۷﴾ وَّالْخَيْلَ وَالْبِغَالَ

وَالْحَمِيْرَ لِتَرْكَبُوْهَا وَزِيْنَةً ؕ وَيَخْلُقُ مَا لَا تَعْلَمُوْنَ ﴿۸﴾

وَعَلَى اللّٰهِ قَصْدُ السَّبِيْلِ وَمِنْهَا جَآئِرٌ ؕ وَلَوْ شَآءَ لَهَدٰىكُمْ

اَجْمَعِيْنَ ﴿۹﴾ هُوَ الَّذِيْٓ اَنْزَلَ مِنَ السَّمَآءِ مَآءً لَّكُمْ مِّنْهُ ع

شَرَابٌ وَّمِنْهُ شَجَرٌ فِيْهِ تُسِيْمُوْنَ ﴿۱۰﴾ يُنْۢبِتُ لَكُمْ بِهِ

الزَّرْعَ وَالزَّيْتُوْنَ وَالنَّخِيْلَ وَالْاَعْنَابَ وَمِنْ كُلِّ

الثَّمَرٰتِ ؕ اِنَّ فِيْ ذٰلِكَ لَاٰيَةً لِّقَوْمٍ يَّتَفَكَّرُوْنَ ﴿۱۱﴾ وَسَخَّرَ

لَكُمُ الَّيْلَ وَالنَّهَارَ ۙ وَالشَّمْسَ وَالْقَمَرَ ؕ وَالنُّجُوْمُ

مُسَخَّرٰتٌۢ بِاَمْرِهٖ ؕ اِنَّ فِيْ ذٰلِكَ لَاٰيٰتٍ لِّقَوْمٍ يَّعْقِلُوْنَ ۙ﴿۱۲﴾

وَمَا ذَرَاَ لَكُمْ فِي الْاَرْضِ مُخْتَلِفًا اَلْوَانُهٗ ؕ اِنَّ فِيْ

ذٰلِكَ لَاٰيَةً لِّقَوْمٍ يَّذَّكَّرُوْنَ ﴿۱۳﴾ وَهُوَ الَّذِيْ

سَخَّرَ الْبَحْرَ لِتَاْكُلُوْا مِنْهُ لَحْمًا طَرِيًّا وَّتَسْتَخْرِجُوْا

مِنْهُ حِلْيَةً تَلْبَسُوْنَهَا ۚ وَتَرَى الْفُلْكَ مَوَاخِرَ

فِيْهِ وَلِتَبْتَغُوْا مِنْ فَضْلِهٖ وَلَعَلَّكُمْ تَشْكُرُوْنَ ﴿۱۴﴾

7. மேலும், மிக்க கஷ்டத்துடனன்றி நீங்கள் சென்றடையமுடியாத அத்தகைய ஊர்களுக்கு அவை உங்களுடைய பளுவான சுமைகளையும் சுமந்து செல்கின்றன; நிச்சயமாக உங்கள் இரட்சகன் (உங்கள் மீது) மிக்க இரக்கமுள்ளவன்; மிகக் கிருபையுடையவன்.

8. இன்னும் குதிரைகளையும், கோவேறு கழுதைகளையும், கழுதைகளையும்_ அவற்றில் நீங்கள் ஏறிச்செல்வதற்காகவும், (உங்களுக்கு) அலங்காரமாகவும் (அவனே படைத்துள்ளான்). இன்னும் நீங்கள் அறியாதவற்றையும் அவன் படைக்கின்றான்.

9. (கோணலில்லாத) நேரான வழியைத் தெளிவு செய்வது அல்லாஹ்வின் மீதே இருக்கிறது; அதில் கோணல் வழியும் உண்டு; இன்னும் அவன் நாடினால், உங்கள் அனைவரையும் நேர் வழியில் செலுத்திவிடுவான்.

10. அவன் எத்தகையவனென்றால், வானத்திலிருந்து நீரை உங்களுக்கு இறக்கிவைத்தான்; அதிலிருந்து குடிப்பும் உங்களுக்குண்டு; அதிலிருந்து (வளர்ந்த) மரங்களும் உங்களுக்குண்டு; அதில் (உங்கள் கால் நடைகளை) நீங்கள் மேய்க்கிறீர்கள்.

11. அதனைக்கொண்டே (விவசாயப்) பயிர்களையும் , ஜைத்தூன், பேரீச்சை, திராட்சைகளையும், இன்னும் பலவகைக் கனிகளிலிருந்தும் அவன் உங்களுக்காக முளைப்பிக்கச் செய்கிறான்; நிச்சயமாக இதில், சிந்திக்கக்கூடிய கூட்டத்தார்க்கு ஓர் அத்தாட்சி இருக்கின்றது.

12. இன்னும், அவன் இரவையும், பகலையும், சூரியனையும், சந்திரனையும் உங்களுக்கு வசப்படுத்தித் தந்துள்ளான்; (அவ்வாறே) நட்சத்திரங்களும் அவனுடைய கட்டளைப்படியே வசப்படுத்தப்பட்டுள்ளன; நிச்சயமாக இதிலும், நினைவுகூறக்கூடிய கூட்டத்தார்க்கு (தகுந்த ) அத்தாட்சிகள் இருக்கின்றன.

13. பூமியில் உங்களுக்காக அவன் படைத்தவற்றையும், அதன் நிறங்கள் மாறுபட்டவைகளாக இருக்க (அவனே அவற்றை உங்களுக்கு வசப்படுத்தித் தந்துள்ளான்) ; நிச்சயமாக, அதில் படிப்பினைபெறும் சமூகத்தார்க்கு அத்தாட்சியிருக்கிறது.

14. இன்னும், அவன் எத்தகையவனென்றால் , கடலை _ அதிலிருந்து நீங்கள் புதிய இறைச்சியை(மீன் போன்றவற்றை) உண்ணுவதற்காகவும், இன்னும், எதை நீங்கள் அணிகின்றீர்களோ அத்தகைய ஆபரணத்தை அதிலிருந்து நீங்கள் வெளிப்படுத்துவதற்காகவும் வசப்படுத்திக் கொடுத்துள்ளான்; இன்னும், தண்ணீரைக் கிழித்துக் கொண்டு அதில் செல்பவைகளாக கப்பல்களை நீர் காண்பீர்; மேலும், அவனது பேரருளை நீங்கள் தேடிக்கொள்வதற்காகவும், நீங்கள் நன்றி செலுத்துவதற்காகவும் (இவ்வாறு கடலை அவனே உங்களுக்கு வசப்படுத்திக் கொடுத்துள்ளான்).

وَاَلْقٰى فِى الْاَرْضِ رَوَاسِىَ اَنْ تَمِيْدَ بِكُمْ وَاَنْهٰرًا وَّسُبُلًا
لَّعَلَّكُمْ تَهْتَدُوْنَ ۙ﴿۱۵﴾ وَعَلٰمٰتٍ ؕ وَبِالنَّجْمِ هُمْ يَهْتَدُوْنَ ﴿۱۶﴾ اَفَمَنْ
يَّخْلُقُ كَمَنْ لَّا يَخْلُقُ ؕ اَفَلَا تَذَكَّرُوْنَ ﴿۱۷﴾ وَاِنْ تَعُدُّوْا نِعْمَةَ اللّٰهِ
لَا تُحْصُوْهَا ؕ اِنَّ اللّٰهَ لَغَفُوْرٌ رَّحِيْمٌ ﴿۱۸﴾ وَاللّٰهُ يَعْلَمُ مَا تُسِرُّوْنَ وَ
مَا تُعْلِنُوْنَ ﴿۱۹﴾ وَالَّذِيْنَ يَدْعُوْنَ مِنْ دُوْنِ اللّٰهِ لَا يَخْلُقُوْنَ
شَيْـًٔا وَّهُمْ يُخْلَقُوْنَ ؕ﴿۲۰﴾ اَمْوَاتٌ غَيْرُ اَحْيَآءٍ ۚ وَمَا يَشْعُرُوْنَ ۙ
اَيَّانَ يُبْعَثُوْنَ ؑ﴿۲۱﴾ اِلٰهُكُمْ اِلٰهٌ وَّاحِدٌ ۚ فَالَّذِيْنَ لَا يُؤْمِنُوْنَ ۲ ع ۸
بِالْاٰخِرَةِ قُلُوْبُهُمْ مُّنْكِرَةٌ وَّهُمْ مُّسْتَكْبِرُوْنَ ﴿۲۲﴾ لَا جَرَمَ اَنَّ
اللّٰهَ يَعْلَمُ مَا يُسِرُّوْنَ وَمَا يُعْلِنُوْنَ ؕ اِنَّهٗ لَا يُحِبُّ الْمُسْتَكْبِرِيْنَ ﴿۲۳﴾
وَاِذَا قِيْلَ لَهُمْ مَّاذَآ اَنْزَلَ رَبُّكُمْ ۙ قَالُوْٓا اَسَاطِيْرُ
الْاَوَّلِيْنَ ۙ﴿۲۴﴾ لِيَحْمِلُوْٓا اَوْزَارَهُمْ كَامِلَةً يَّوْمَ الْقِيٰمَةِ ۙ
وَمِنْ اَوْزَارِ الَّذِيْنَ يُضِلُّوْنَهُمْ بِغَيْرِ عِلْمٍ ؕ اَلَا سَآءَ مَا
يَزِرُوْنَ ؑ﴿۲۵﴾ قَدْ مَكَرَ الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ فَاَتَى ۳ ع ۹
اللّٰهُ بُنْيَانَهُمْ مِّنَ الْقَوَاعِدِ فَخَرَّ عَلَيْهِمُ السَّقْفُ مِنْ
فَوْقِهِمْ وَاَتٰىهُمُ الْعَذَابُ مِنْ حَيْثُ لَا يَشْعُرُوْنَ ﴿۲۶﴾

15. பூமியின் மீது — அது உங்களைக் கொண்டு அசையாதிருப்பதற்காகப் (பெரிய) பெரிய மலைகளை உறுதியாக அவன் அமைத்தான்! (உங்கள் போக்குவரத்துக்கு சரியான வழியை) நீங்கள் அறிவதற்குப் (பல) பாதைகளையும், ஆறுகளையும் (அமைத்தான்).

16. இன்னும், (வழிகாட்டும்) பல அடையாளங்களையும் (அவன் அமைத்துள்ளான்); நட்சத்திரங்களைக் கொண்டும் (பிரயாணிகளாகிய) அவர்கள் (தங்கள்) வழியை அறிந்து கொள்கின்றனர்.

17. எவன் படைக்கின்றானோ (அவன் எதையுமே) படைக்காத ஒருவனைப் போன்றவனா? நீங்கள் (இதை) சிந்திக்க மாட்டீர்களா?

18. மேலும், அல்லாஹ்வின் அருட்கொடையை நீங்கள் எண்ணுவீர்களாயின், அதனை நீங்கள் (கணக்கிட்டு எண்ணி) வரையறுத்து விடமாட்டீர்கள்; நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிக்கிறவன்; மிகக்கிருபையுடையோன்.

19. நீங்கள் மறைத்து வைத்திருப்பதையும், நீங்கள் பகிரங்கப்படுத்துவதையும் நிச்சயமாக அல்லாஹ் நன்கு அறிவான்.

20. மேலும், அல்லாஹ்வையன்றி, அவர்கள் அழைக்கிறார்களே அத்தகையோர் — அவர்கள் எந்தப் பொருளையும் படைக்கமாட்டார்கள்; அவர்களோ (அவனால்) படைக்கப்படுபவர்களாவர்.

21. (அன்றி, அவர்கள்) இறந்தவர்களே — உயிருள்ளவர்களல்லர்; அவர்கள் எப்பொழுது (உயிர் கொடுத்து) எழுப்பப்படுவார்கள் என்பதையும் அவர்கள் அறியமாட்டார்கள்

22. உங்களுடைய (வணக்கத்திற்குரிய) நாயன் ஒரே நாயன்தான்; ஆகவே, மறுமையை நம்பவில்லையே அத்தகையோர் — அவர்களுடைய இதயங்கள் (எதைக்கேட்டபோதிலும்) மறுப்பவைகளாகவே இருக்கின்றன; அவர்கள் பெருமையடித்துக் கொண்டவர்களாகவும் இருக்கின்றனர்.

23. நிச்சயமாக அல்லாஹ், அவர்கள் மறைத்து வைத்திருப்பதையும், அவர்கள் பகிரங்கப்படுத்துவதையும் நன்கு அறிவான் என்பதில் சந்தேகமில்லை; நிச்சயமாக அவன் பெருமையடித்துக்கொண்ட (இ)வர்களை நேசிப்பதில்லை.

24. இன்னும், (குர்ஆனைக் குறிப்பிட்டு அதில்,) "உங்களுடைய இரட்சகன் எதை இறக்கி வைத்தான்" என்று அவர்களிடம் கேட்கப்பட்டால், "(இது) முன்னுள்ளோரின் கட்டுக்கதைகள்" என்று அவர்கள் (பதில்) கூறுகின்றனர்.

25. மறுமை நாளில் தங்கள் பாவச் சுமைகளை இவர்கள் பூரணமாகச் சுமப்பதற்காக மற்றும் அறிவின்றி இவர்கள் வழிகெடுத்த மற்றவர்களின் பாவச்சுமைகளை இவர்களே சுமப்பதற்காக வேண்டி (இவ்வாறு கூறுகிறார்கள்; இருவரின் பாவச்சுமைகளை) அவர்கள் சுமப்பது மிகக் கெட்டது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

26. இவர்களுக்கு முன்னிருந்தார்களே அவர்களும் நிச்சயமாகச் சூழ்ச்சி செய்து கொண்டிருந்தார்கள்; ஆகவே, அல்லாஹ் அவர்களின் கட்டடத்தை அடித்தளங்களிலிருந்து அடியோடு பெயர்த்தெடுத்து விட்டான்; (எனவே அக்கட்டடத்தின்) முகடு அவர்களுக்கு மேலிருந்து அவர்களின் மீது விழுந்து விட்டது; இன்னும், அவர்கள் உணர்ந்து கொள்ளமுடியாத விதத்தில், வேதனை அவர்களை வந்தடைந்தது.

ثُمَّ يَوْمَ الْقِيٰمَةِ يُخْزِيْهِمْ وَيَقُوْلُ اَيْنَ شُرَكَآءِىَ الَّذِيْنَ
كُنْتُمْ تُشَآقُّوْنَ فِيْهِمْ ؕ قَالَ الَّذِيْنَ اُوْتُوا الْعِلْمَ اِنَّ الْخِزْىَ
الْيَوْمَ وَالسُّوْٓءَ عَلَى الْكٰفِرِيْنَ ﴿۲۷﴾ الَّذِيْنَ تَتَوَفّٰىهُمُ الْمَلٰٓئِكَةُ
ظَالِمِىْٓ اَنْفُسِهِمْ ۪ فَاَلْقَوُا السَّلَمَ مَا كُنَّا نَعْمَلُ مِنْ سُوْٓءٍ ؕ بَلٰٓى اِنَّ
اللّٰهَ عَلِيْمٌۢ بِمَا كُنْتُمْ تَعْمَلُوْنَ ﴿۲۸﴾ فَادْخُلُوْٓا اَبْوَابَ جَهَنَّمَ
خٰلِدِيْنَ فِيْهَا ؕ فَلَبِئْسَ مَثْوَى الْمُتَكَبِّرِيْنَ ﴿۲۹﴾ وَقِيْلَ لِلَّذِيْنَ
اتَّقَوْا مَاذَآ اَنْزَلَ رَبُّكُمْ ؕ قَالُوْا خَيْرًا ؕ لِلَّذِيْنَ اَحْسَنُوْا فِىْ
هٰذِهِ الدُّنْيَا حَسَنَةٌ ؕ وَلَدَارُ الْاٰخِرَةِ خَيْرٌ ؕ وَلَنِعْمَ دَارُ الْمُتَّقِيْنَ ﴿۳۰﴾
جَنّٰتُ عَدْنٍ يَّدْخُلُوْنَهَا تَجْرِىْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ لَهُمْ فِيْهَا
مَا يَشَآءُوْنَ ؕ كَذٰلِكَ يَجْزِى اللّٰهُ الْمُتَّقِيْنَ ﴿۳۱﴾ الَّذِيْنَ تَتَوَفّٰىهُمُ
الْمَلٰٓئِكَةُ طَيِّبِيْنَ ۙ يَقُوْلُوْنَ سَلٰمٌ عَلَيْكُمُ ۙ ادْخُلُوا الْجَنَّةَ بِمَا
كُنْتُمْ تَعْمَلُوْنَ ﴿۳۲﴾ هَلْ يَنْظُرُوْنَ اِلَّآ اَنْ تَاْتِيَهُمُ الْمَلٰٓئِكَةُ اَوْ
يَاْتِىَ اَمْرُ رَبِّكَ ؕ كَذٰلِكَ فَعَلَ الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ ؕ وَمَا ظَلَمَهُمُ
اللّٰهُ وَلٰكِنْ كَانُوْٓا اَنْفُسَهُمْ يَظْلِمُوْنَ ﴿۳۳﴾ فَاَصَابَهُمْ سَيِّاٰتُ
مَا عَمِلُوْا وَحَاقَ بِهِمْ مَّا كَانُوْا بِهٖ يَسْتَهْزِءُوْنَ ﴿۳۴﴾ ع ۴ ۹ ۱۰

27. பின்னர், மறுமை நாளில் அவன் அவர்களை இழிவுபடுத்துவான்; மேலும், "(விசுவாசிகளுடன்) நீங்கள் தர்க்கித்துக் கொண்டிருந்தீர்களே அத்தகைய என்னுடைய இணையாளர்கள் எங்கே?" என்றும் கேட்பான்; (அச்சமயம்,) அறிவு கொடுக்கப்பட்டார்களே அத்தகையோர் "இன்றையத்தினம் இழிவும், வேதனையும் நிச்சயமாக நிராகரிப்போரின் மீதுதான்" என்று கூறுவார்கள்.

28. அவர்கள் எத்தகையோரென்றால், தமக்குத் தாமே அநியாயம் செய்துகொண்டவர்களாக இருக்கும் நிலையில் அவர்(களின் உயிர்)களை மலக்குகள் கைப்பற்றுவார்கள்; அவர்கள் "நாங்கள் எவ்விதக் குற்றமும் செய்யவில்லை" என்று (கூறி மலக்குகளிடம்) சமாதானத்தைக் கோருவார்கள்; "அல்ல! நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்து கொண்டிருந்தவற்றை நன்கறிந்தவன்" (என்று மலக்குகள் பதிலளிப்பார்கள்).

29. ஆகவே, "நரகத்தின் வாயில்களில் _ அதில் நிரந்தரமாக (த்தங்கி) இருப்பவர்களாக நீங்கள் புகுந்துவிடுங்கள்" (என்று கூறுவார்கள்). ஆகவே, பெருமையடித்துக்கொண்டிருந்த (இ)வர்களின் ஒதுங்குமிடம் மகா கெட்டது.

30. மேலும், பயபக்தியுடையவர்களிடம், உங்கள் இரட்சகன் எதை இறக்கிவைத்தான் என்று கேட்கப்பட்டது; (அப்போது) அவர்கள், "நன்மையையே (இறக்கி வைத்தான்)" என்று கூறுவார்கள்; இவ்வுலகில் அழகானவற்றைச் செய்தார்களே அத்தகையோருக்கு (இவ்வுலகிலும் அழகான) நன்மையுண்டு; (அவர்களுடைய) மறுமையின் வீடும் மிக்க மேலானதாக இருக்கும்; இன்னும், பயபக்தியுடையவர்களின் வீடு திட்டமாக நல்லதாகி விட்டது.

31. நிலைத்திருக்கக்கூடிய சுவனபதிகளாகும்; அவற்றில் அவர்கள் பிரவேசிப்பார்கள்; அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும்; அவர்கள் விரும்பியவை அவற்றில் அவர்களுக்குண்டு; பயபக்தியுடையோருக்கு இவ்வாறே அல்லாஹ் நற்கூலி கொடுக்கின்றான்.

32. அவர்கள் எத்தகையோரென்றால், (ஈமானுடன்) நல்லவர்களாக இருக்கும் நிலைமையில் மலக்குகள் அவர்(களுடைய உயிர்)களைக் கைப்பற்றுவார்கள்; அவர்களிடம் "ஸலாமுன் அலைக்கும் (உங்களுக்குச் சாந்தி உண்டாவதாக!) நீங்கள் செய்துகொண்டிருந்ததின் காரணமாக சுவனபதியில் பிரவேசியுங்கள்" என்று அவர்கள் கூறுவார்கள்.

33. (நிராகரிப்போர்களோ, தங்கள் உயிரைக் கைப்பற்றுவதற்காக) அவர்களிடம் மலக்குகள் வருவதையோ, அல்லது உமதிரட்சகனின் கட்டளை வருவதையோ தவிர, (வேறெதனையும்) அவர்கள் எதிர் பார்க்கின்றனரா? இவர்களுக்கு முன்னிருந்தவர்களும் இவ்வாறே செய்துகொண்டிருந்தனர்; அல்லாஹ் அவர்களுக்கு அநியாயம் (எதுவும்) செய்யவில்லை; எனினும், அவர்கள் தமக்குத்தாமே அநியாயம் செய்பவர்களாக இருந்தார்கள்.

34. ஆகவே, அவர்கள் செய்துகொண்டிருந்த தீமைகள் அவர்களை வந்தடைந்தன; மேலும் எதை அவர்கள் பரிகாசம் செய்துகொண்டிருந்தார்களோ, அது அவர்களைச் சூழ்ந்து கொண்டது.

وَقَالَ الَّذِيْنَ اَشْرَكُوْا لَوْ شَآءَ اللّٰهُ مَا عَبَدْنَا مِنْ دُوْنِهٖ
مِنْ شَيْءٍ نَّحْنُ وَلَآ اٰبَآؤُنَا وَلَا حَرَّمْنَا مِنْ دُوْنِهٖ مِنْ شَيْءٍ ؕ
كَذٰلِكَ فَعَلَ الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ ۚ فَهَلْ عَلَى الرُّسُلِ اِلَّا
الْبَلٰغُ الْمُبِيْنُ ۝٣٥ وَلَقَدْ بَعَثْنَا فِيْ كُلِّ اُمَّةٍ رَّسُوْلًا اَنِ
اعْبُدُوا اللّٰهَ وَاجْتَنِبُوا الطَّاغُوْتَ ۚ فَمِنْهُمْ مَّنْ هَدَى اللّٰهُ
وَمِنْهُمْ مَّنْ حَقَّتْ عَلَيْهِ الضَّلٰلَةُ ؕ فَسِيْرُوْا فِي الْاَرْضِ فَانْظُرُوْا
كَيْفَ كَانَ عَاقِبَةُ الْمُكَذِّبِيْنَ ۝٣٦ اِنْ تَحْرِصْ عَلٰى هُدٰىهُمْ
فَاِنَّ اللّٰهَ لَا يَهْدِيْ مَنْ يُّضِلُّ وَمَا لَهُمْ مِّنْ نّٰصِرِيْنَ ۝٣٧ وَ
اَقْسَمُوْا بِاللّٰهِ جَهْدَ اَيْمَانِهِمْ ۙ لَا يَبْعَثُ اللّٰهُ مَنْ يَّمُوْتُ ؕ
بَلٰى وَعْدًا عَلَيْهِ حَقًّا وَّلٰكِنَّ اَكْثَرَ النَّاسِ لَا يَعْلَمُوْنَ ۝٣٨ ۙ
لِيُبَيِّنَ لَهُمُ الَّذِيْ يَخْتَلِفُوْنَ فِيْهِ وَلِيَعْلَمَ الَّذِيْنَ كَفَرُوْٓا
اَنَّهُمْ كَانُوْا كٰذِبِيْنَ ۝٣٩ اِنَّمَا قَوْلُنَا لِشَيْءٍ اِذَآ اَرَدْنٰهُ اَنْ نَّقُوْلَ
لَهٗ كُنْ فَيَكُوْنُ ۝٤٠ ع وَالَّذِيْنَ هَاجَرُوْا فِي اللّٰهِ مِنْ بَعْدِ مَا عٰ ٥
ظُلِمُوْا لَنُبَوِّئَنَّهُمْ فِي الدُّنْيَا حَسَنَةً ؕ وَلَاَجْرُ الْاٰخِرَةِ اَكْبَرُ ۘ لَوْ ۘ = وقف لازم
كَانُوْا يَعْلَمُوْنَ ۝٤١ ۙ الَّذِيْنَ صَبَرُوْا وَعَلٰى رَبِّهِمْ يَتَوَكَّلُوْنَ ۝٤٢

35. "அல்லாஹ் நாடியிருந்தால், நாங்களும், எங்கள் மூதாதையர்களும் அவனையன்றி மற்றெதையும் வணங்கி இருக்கவும் மாட்டோம்; அவனுடைய கட்டளையின்றி எதனையும் (ஆகாதவையெனத்) தடுத்திருக்கவும் மாட்டோம்" என்று இணைவைத்துக் கொண்டிருந்தோர் கூறுகின்றனர். இவ்வாறே இவர்களுக்கு முன் இருந்தவர்களும் செய்தார்கள். (நம் தூதைத்) தெளிவாக எத்திவைப்பதைத்தவிர (வேறு எதுவும் நம்) தூதர்களின் மீது உண்டா?

36. ஒவ்வொரு சமூகத்திலும் திட்டமாக நாம் ஒரு தூதரை அனுப்பியிருக்கிறோம்; (அத்தூதர் அச்சமூகத்தவர்களிடம்) அல்லாஹ்வையே வணங்குங்கள்; (அல்லாஹ் அல்லாத வணங்கப்படும் ஷைத்தான்களாகிய அனைத்து) தாகூத்திலிருந்தும் நீங்கள் விலகிக்கொள்ளுங்கள்; (என்று கூறினார்கள்) ஆகவே, அவர்களில் அல்லாஹ் நேர்வழியில் செலுத்தியவர்களும் இருக்கிறார்கள்; இன்னும் எவர்மீது வழிகேடு விதியாகிவிட்டதோ அவரும் அவர்களில் இருக்கிறார்கள். ஆகவே, நீங்கள் பூமியில் சுற்றித்திரிந்து (அத்தூதர்களைப்) பொய்யாக்கியவர்களின் முடிவு எப்படி இருந்தது என்பதை (கவனித்து)ப்பாருங்கள்.

37. (நபியே!) அவர்கள் நேர் வழிபெறுவதின் மீது நீர் (எவ்வளவுதான்) பேராசை கொண்டாலும் நிச்சயமாக அல்லாஹ், அவன் வழிதவறச்செய்தவரை நேர் வழியில் செலுத்தமாட்டான்; இன்னும், அவர்களுக்கு உதவிசெய்பவர்கள் (எவரும்) இல்லை.

38. (நபியே!)இறந்தவர்களை அல்லாஹ் (உயிர்கொடுத்து) எழுப்பமாட்டான் என்று அல்லாஹ்வின் மீது (நிராகரிப்போரான) அவர்கள் மிக்க உறுதியான சத்தியமாக சத்தியம் செய்கின்றனர்; அவ்வாறன்று! (இறந்தவர்களை உயிர் கொடுத்து எழுப்புவான் என்ற) அவனின் வாக்கு முற்றிலும் உண்மையானதே; எனினும் மனிதர்களில் பெரும்பாலோர் (இதனை)அறிந்துகொள்ளமாட்டார்கள்.

39. (உலகில்) எ(வ்விஷயத்)தில் அவர்கள் கருத்து வேறுபாடு கொண்டிருந்தார்களோ அதனை அவர்களுக்கு அவன் தெளிவு செய்வதற்காகவும், நிராகரித்தோர் நிச்சயமாக அவர்கள் பொய்யர்களாகவே இருந்தார்கள் என்பதை அறிந்துகொள்வதற்காகவும் (அவர்களை அவன் உயிர்கொடுத்து எழுப்புவான்).

40. ஏதேனும் ஒரு பொருளுக்கு—அதை (உண்டுபண்ண) நாம் நாடினால், நமது கூற்றெல்லாம் "ஆகுக" என்று அதற்கு நாம் கூறுவதுதான்; (உடனே) அது ஆகிவிடும்.

41. (விசுவாசிகளே!) விரோதிகளால் அநீதமிழைக்கப்பட்ட பின்னர், அல்லாஹ்வுக்காக(த் தங்கள் ஊரைத்துறந்து) ஹிஜ்ரத்துப் புறப்பட்டார்களே அத்தகையோர் — அவர்களை நிச்சயமாக நாம் இவ்வுலகில் அழகிய இடத்தில் குடியிருத்தாட்டுவோம்; அவர்கள் அறிந்துகொண்டவர்களாக இருந்தால் மறுமையின் கூலியோ மிகப்பெரியதாகும்.

42. இவர்கள் எத்தகையோரென்றால், (இம்மை வாழ்க்கையில் கஷ்டங்களை சகித்துப்) பொறுத்துக்கொண்டார்கள்; (தங்களின்காரியங்களை ஒப்படைத்து முழுமையாக) தங்களுடைய இரட்சகன் மீதே நம்பிக்கையும் வைப்பார்கள்.

وَمَآ اَرْسَلْنَا مِنْ قَبْلِكَ اِلَّا رِجَالًا نُّوْحِيْٓ اِلَيْهِمْ فَسْــَٔلُوْٓا اَهْلَ
الذِّكْرِ اِنْ كُنْتُمْ لَا تَعْلَمُوْنَ ۴۳ بِالْبَيِّنٰتِ وَالزُّبُرِ ۭ وَاَنْزَلْنَآ اِلَيْكَ
الذِّكْرَ لِتُبَيِّنَ لِلنَّاسِ مَا نُزِّلَ اِلَيْهِمْ وَلَعَلَّهُمْ يَتَفَكَّرُوْنَ ۴۴ النصف
اَفَاَمِنَ الَّذِيْنَ مَكَرُوا السَّيِّاٰتِ اَنْ يَّخْسِفَ اللّٰهُ بِهِمُ الْاَرْضَ
اَوْ يَاْتِيَهُمُ الْعَذَابُ مِنْ حَيْثُ لَا يَشْعُرُوْنَ ۴۵ۙ اَوْ يَاْخُذَهُمْ
فِيْ تَقَلُّبِهِمْ فَمَا هُمْ بِمُعْجِزِيْنَ ۴۶ۙ اَوْ يَاْخُذَهُمْ عَلٰي تَخَوُّفٍ ۭ فَاِنَّ
رَبَّكُمْ لَرَءُوْفٌ رَّحِيْمٌ ۴۷ اَوَلَمْ يَرَوْا اِلٰى مَا خَلَقَ اللّٰهُ مِنْ شَيْءٍ
يَّتَفَيَّؤُا ظِلٰلُهٗ عَنِ الْيَمِيْنِ وَالشَّمَاۗىِٕلِ سُجَّدًا لِّلّٰهِ وَهُمْ
دٰخِرُوْنَ ۴۸ وَلِلّٰهِ يَسْجُدُ مَا فِي السَّمٰوٰتِ وَمَا فِي الْاَرْضِ مِنْ
دَاۗبَّةٍ وَّالْمَلٰۗىِٕكَةُ وَهُمْ لَا يَسْتَكْبِرُوْنَ ۴۹ يَخَافُوْنَ رَبَّهُمْ مِّنْ فَوْقِهِمْ
وَيَفْعَلُوْنَ مَا يُؤْمَرُوْنَ ۵۰ ۩ السجدة وَقَالَ اللّٰهُ لَا تَتَّخِذُوْٓا اِلٰـهَيْنِ اثْنَيْنِ ۚ ع ۶ السجدة ۴ ۱۲
اِنَّمَا هُوَ اِلٰهٌ وَّاحِدٌ ۚ فَاِيَّايَ فَارْهَبُوْنِ ۵۱ وَلَهٗ مَا فِي السَّمٰوٰتِ وَ
الْاَرْضِ وَلَهُ الدِّيْنُ وَاصِبًا ۭ اَفَغَيْرَ اللّٰهِ تَتَّقُوْنَ ۵۲ وَمَا بِكُمْ
مِّنْ نِّعْمَةٍ فَمِنَ اللّٰهِ ثُمَّ اِذَا مَسَّكُمُ الضُّرُّ فَاِلَيْهِ تَجْــــَٔرُوْنَ ۵۳ ۚ
ثُمَّ اِذَا كَشَفَ الضُّرَّ عَنْكُمْ اِذَا فَرِيْقٌ مِّنْكُمْ بِرَبِّهِمْ يُشْرِكُوْنَ ۵۴ۙ

43. (நபியே!) இன்னும் உமக்கு முன்னர் (மனிதர்களில் தூதுவர்களாக) ஆடவர்களையே தவிர நாம் அனுப்பவில்லை ; அவர்கள் பால் நாம் வஹீ அறிவித்தோம்; ஆகவே, நீங்கள்(அதனைப்பற்றி) அறியாதவர்களாக இருந்தால் அறிந்தவர்களிடம் கேட்டு(த் தெரிந்து)க்கொள்ளுங்கள்.

44. தெளிவான அத்தாட்சிகளையும், வேதங்களையும் (அத்தூதர்களுக்கு நாம் கொடுத்தனுப்பினோம்) . மேலும், மனிதர்களுக்கு அவர்கள் பால் இறக்கி வைக்கப்பட்டதை நீர் அவர்களுக்குத் தெளிவு படுத்துவதற்காக மற்றும் அவர்கள் சிந்திப்பவர்களாக ஆகிவிடலாம் என்பதற்காகவும் உம்பால் இவ்வேதத்தை நாம் இறக்கி வைத்தோம்.

45. தீமைகளைச் (செய்திட ) சூழ்ச்சி செய்வோர் _ அல்லாஹ் அவர்களைக் கொண்டு பூமியை விழுங்குமாறு செய்வான் என்பதையோ, அல்லது அவர்கள் அறிந்து கொள்ளாத விதத்தில் அவர்களை வேதனை வந்தடையும் என்பதையோ அவர்கள் அச்சமற்றிருக்கிறார்களா ?

46. அல்லது அவர்கள் (காரியங்களில்) ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போதே அவர்களை அவன் பிடித்துவிடுவான் என்பதையும் (அச்சமற்றிருக்கிறார்களா?) அவர்கள் (நம்மை) இயலாமலாக்கக்கூடியவர்கள் அல்லர்.

47. அல்லது ( யாதோர் ஆபத்துவருமென்ற) பயத்தின்மீது (இவர்கள் இருக்கும் நிலையில்) இவர்களை அவன் பிடித்துவிடுவான் என்பதையும்(அவர்கள் அச்சமற்றிருக்கிறார்களா?) ஆகவே , நிச்சயமாக உங்கள் இரட்சகன் மிக்க இரக்கமுடையவன்; மிகக்கிருபையுடையவன் .

48. அல்லாஹ் படைத்தவற்றில் உள்ள எப்பொருளும் அதனுடைய நிழல்கள், அவை தாழ்வானவையாக இருக்கும் நிலையில் அல்லாஹ்வுக்கு சாஷ்டாங்கம் செய்தவையாக வலப்பக்கமும், இடப்பக்கங்களிலும் சாய்கின்றன என்பதை இவர்கள் பார்க்கவில்லையா?

49. ஜீவராசிகளில் வானங்களிலுள்ளவையும், பூமியிலுள்ளவையும் அல்லாஹ்வுக்கே சிரம் பணி(ந்து வணங்கு)கின்றன; இன்னும் மலக்குகளும்_ (அவ்வாறே சிரம் பணிகின்றனர்.) அவர்களோ பெருமையடிக்கமாட்டார்கள்.

50. அவர்கள் தங்களுக்கு மேல் உள்ள தங்கள் இரட்சகனைப் பயப்படுகின்றனர்; இன்னும் தங்களுக்கு கட்டளையிடப்படுகின்றதைச் செய்கின்றனர்.

51. இன்னும், அல்லாஹ் கூறுகிறான்: (ஒன்றுக்குப் பதிலாக )"இரு தெய்வங்களை நீங்கள் எடுத்துக்கொள்ளாதீர்கள்; நிச்சயமாக, அவன் (வணக்கத்திற்குரிய) ஒரே ஒரு நாயன்தான்; ஆகவே (மனிதர்களே!அந்த ஒருவனாகிய) என்னையே நீங்கள் பயப்படுங்கள்".

52. மேலும், வானங்களிலுள்ளவையும் , பூமியிலுள்ளவையும் அவனுக்கே உரியன; வணக்கமும் நிரந்தரமாக அவனுக்கே உரியதாகும்; எனவே, அல்லாஹ் அல்லாததையா நீங்கள் பயப்படுகிறீர்கள்?

53. அருட்கொடைகளில் உங்களிடம் இருப்பவை அல்லாஹ்விடமிருந்து உள்ளவையாகும்; பிறகு உங்களை யாதொரு துன்பம் தொட்டுவிட்டால் (அதிலிருந்து விடுபட ) அவனிடமே முறையிடுகிறீர்கள்.

54. பின்னர் , உங்களைவிட்டும் அத்துன்பத்தை அவன் நீக்கிவிட்டால், அச்சமயத்தில் உங்களில் ஒரு பிரிவினர் (இத்தகைய) தங்கள் இரட்சகனுக்கே இணைவைக்கின்றனர்.

لِيَكْفُرُوْا بِمَآ اٰتَيْنٰهُمْ ۭ فَتَمَتَّعُوْا ۣ فَسَوْفَ تَعْلَمُوْنَ ﴿۵۵﴾ وَيَجْعَلُوْنَ
لِمَا لَا يَعْلَمُوْنَ نَصِيْبًا مِّمَّا رَزَقْنٰهُمْ ۭ تَاللّٰهِ لَتُسْــَٔـلُنَّ عَمَّا كُنْتُمْ
تَفْتَرُوْنَ ﴿۵۶﴾ وَيَجْعَلُوْنَ لِلّٰهِ الْبَنٰتِ سُبْحٰنَهٗ ۙ وَلَهُمْ مَّا يَشْتَهُوْنَ ﴿۵۷﴾
وَاِذَا بُشِّرَ اَحَدُهُمْ بِالْاُنْثٰى ظَلَّ وَجْهُهٗ مُسْوَدًّا وَّهُوَ كَظِيْمٌ ﴿۵۸﴾ ج
يَتَوَارٰى مِنَ الْقَوْمِ مِنْ سُوْۗءِ مَا بُشِّرَ بِهٖ ۭ اَيُمْسِكُهٗ عَلٰي هُوْنٍ اَمْ
يَدُسُّهٗ فِي التُّرَابِ ۭ اَلَا سَاۗءَ مَا يَحْكُمُوْنَ ﴿۵۹﴾ لِلَّذِيْنَ لَا يُؤْمِنُوْنَ
بِالْاٰخِرَةِ مَثَلُ السَّوْءِ ۚ وَلِلّٰهِ الْمَثَلُ الْاَعْلٰى ۭ وَهُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ ﴿۶۰﴾ ع ۷/۱۴
وَلَوْ يُؤَاخِذُ اللّٰهُ النَّاسَ بِظُلْمِهِمْ مَّا تَرَكَ عَلَيْهَا مِنْ دَاۗبَّةٍ وَّلٰكِنْ
يُّؤَخِّرُهُمْ اِلٰٓى اَجَلٍ مُّسَمًّى ۚ فَاِذَا جَاۗءَ اَجَلُهُمْ لَا يَسْتَاْخِرُوْنَ
سَاعَةً وَّلَا يَسْتَقْدِمُوْنَ ﴿۶۱﴾ وَيَجْعَلُوْنَ لِلّٰهِ مَا يَكْرَهُوْنَ وَتَصِفُ
اَلْسِنَتُهُمُ الْكَذِبَ اَنَّ لَهُمُ الْحُسْنٰى ۭ لَا جَرَمَ اَنَّ لَهُمُ النَّارَ وَ
اَنَّهُمْ مُّفْرَطُوْنَ ﴿۶۲﴾ تَاللّٰهِ لَقَدْ اَرْسَلْنَآ اِلٰٓى اُمَمٍ مِّنْ قَبْلِكَ
فَزَيَّنَ لَهُمُ الشَّيْطٰنُ اَعْمَالَهُمْ فَهُوَ وَلِيُّهُمُ الْيَوْمَ وَلَهُمْ عَذَابٌ
اَلِيْمٌ ﴿۶۳﴾ وَمَآ اَنْزَلْنَا عَلَيْكَ الْكِتٰبَ اِلَّا لِتُبَيِّنَ لَهُمُ الَّذِي
اخْتَلَفُوْا فِيْهِ ۙ وَهُدًى وَّرَحْمَةً لِّقَوْمٍ يُّؤْمِنُوْنَ ﴿۶۴﴾

55. நாம் அவர்களுக்குக் கொடுத்தவற்றைக்கொண்டு அவர்கள் நிராகரித்து விடுவதற்காக (இணை வைக்கின்றனர்). ஆதலால் ( இவ்வுலகில் ) சிறிது சுகம் அனுபவித்துக்கொள்ளுங்கள் ; பின்னர் (மறுமையில்) நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

56. அன்றியும், நாம் அவர்களுக்குக் கொடுத்தவற்றிலிருந்து ஒருபாகத்தைத் தாங்கள் அறியாதவை (களான தெய்வங்) களுக்கென ஆக்குகின்றனர்; அல்லாஹ்வின்மீது சத்தியமாக! நீங்கள் இட்டுக்கட்டிக் கூறிக்கொண்டிருந்ததைப் பற்றி, நிச்சயமாக நீங்கள் (மறுமையில்) கேட்கப்படுவீர்கள்.

57. மேலும், (நபியே!) அவர்கள் அல்லாஹ்வுக்குப் பெண் மக்களை ஆக்குகிறார்கள்; அவனோ, (இதனை விட்டும்) மிகப் பரிசுத்தமானவன்; இன்னும், தங்களுக்காக அவர்கள் (தங்கள் மனம்) விரும்புவதை (_ஆண் மக்களை ஆக்குகின்றனர்.)

58. இன்னும், அவர்களில் ஒருவன் பெண் குழந்தை (பிறந்திருப்பது) கொண்டு நன்மாராயங் கூறப்பட்டால், கோபத்தை அடக்கி விழுங்கியவனாக அவன் இருக்க, அவனுடைய முகம் (துக்கத்தால்) கறுத்ததாக ஆகிவிடுகிறது.

59. எதனைக் கொண்டு நன்மாராயங்கூறப்பட்டானோ, அதன் தீமையினால் இழிவுடன் அதை வைத்துக்கொள்வதா? அல்லது அதை மண்ணில் புதைத்து விடுவதா? என்று (கவலைப்பட்டு, மக்கள் முன் வராமல் ) சமூகத்தாரை விட்டும் மறைந்து கொள்கிறான்; அவர்கள் செய்யும் தீர்மானம் மிகக் கெட்டது என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்.

60. (இத்தகைய) கெட்ட வர்ணனை மறுமையை விசுவாசிக்காதவர் களுக்குரியதாகும்; அல்லாஹ்வுக்கோ, மிக்க மேலான வர்ணனை உண்டு; அவனே(யாவரையும்) மிகைத்தோன்; தீர்க்கமான அறிவுடையோன்.

61. இன்னும், மனிதர்களை_ அவர்கள் செய்யும் அநியாயத்துக்காக அவர்களை (உடனுக்குடன்) அல்லாஹ் பிடிப்பதாக இருந்தால், (பூமியில்)ஊர்ந்து திரிபவைகளில் எதையுமே அவன் விட்டுவைக்கமாட்டான்; எனினும், ஒரு குறிப்பிட்ட தவணை வரையில் அவர்களைப் பிற்படுத்துகிறான்; ஆகவே அவர்களுடைய தவணை வந்து விட்டால், ஒருகனமேனும் அவர்கள் பிந்தவோ, முந்தவோ மாட்டார்கள்

62. மேலும், தாங்கள் வெறுக்கின்ற(பெண் சந்ததியான)தை அல்லாஹ்வுக்கு அவர்கள் ஆக்குகின்றனர்; இன்னும், (மறுமையில்) நிச்சயமாகத் தங்களுக்கு நன்மை உண்டு என்று இவர்களுடைய நாவுகள் பொய்யை வர்ணிக்கின்றன; நிச்சயமாக இவர்களுக்கு நரக நெருப்புத்தான் உண்டு என்பதிலும், நிச்சயமாக, முதலாவதாக (நரகத்திற்கு) இவர்கள் தாம் முற்படுத்தப்படுபவர்கள் என்பதிலும் சந்தேகமில்லை.

63. அல்லாஹ்வின் மீது சத்தியமாக! உமக்கு முன்னிருந்த பல சமூகத்தார்பால் திட்டமாக நாம் (நம்) தூதர்களை அனுப்பி வைத்தோம்; அப்போது ஷைத்தான் அவர்களுக்கு அவர்களுடைய (தீய) காரியங்களை அலங்கரித்துக் காண்பித்தான்; ஆகவே இன்றையத்தினம் அவர்களுக்கு அவனே தோழனாக இருக்கிறான்; (மறுமையில்) அவர்களுக்கு மிக்க துன்புறுத்தும் வேதனையுண்டு.

64. அன்றியும், (நபியே!) அவர்கள் எ(வ்விஷயத்)தில் கருத்து வேறுபாடு கொண்டிருக்கிறார்களோ அதனை, நீர் தெளிவாக்குவதற்காகவும், விசுவாசமுடைய கூட்டத்தினருக்கு (இது) நேர் வழியாகவும், ஓர் அருளாகவும் இருப்பதற்கே தவிர இவ்வேதத்தை உம்மீது நாம் இறக்கி வைக்கவில்லை.

وَاللّٰهُ اَنْزَلَ مِنَ السَّمَآءِ مَآءً فَاَحْيَا بِهِ الْاَرْضَ بَعْدَ مَوْتِهَا ؕ اِنَّ فِیْ
ذٰلِكَ لَاٰيَةً لِّقَوْمٍ يَّسْمَعُوْنَ ﴿٦٥﴾ وَاِنَّ لَكُمْ فِی الْاَنْعَامِ لَعِبْرَةً ؕ نُسْقِيْكُمْ ع ٨ ٥ ١٤
مِّمَّا فِیْ بُطُوْنِهٖ مِنْۢ بَيْنِ فَرْثٍ وَّدَمٍ لَّبَنًا خَالِصًا سَآئِغًا لِّلشّٰرِبِيْنَ ﴿٦٦﴾
وَمِنْ ثَمَرٰتِ النَّخِيْلِ وَالْاَعْنَابِ تَتَّخِذُوْنَ مِنْهُ سَكَرًا وَّرِزْقًا
حَسَنًا ؕ اِنَّ فِیْ ذٰلِكَ لَاٰيَةً لِّقَوْمٍ يَّعْقِلُوْنَ ﴿٦٧﴾ وَاَوْحٰی رَبُّكَ اِلَی
النَّحْلِ اَنِ اتَّخِذِیْ مِنَ الْجِبَالِ بُيُوْتًا وَّمِنَ الشَّجَرِ وَمِمَّا يَعْرِشُوْنَ ﴿٦٨﴾
ثُمَّ كُلِیْ مِنْ كُلِّ الثَّمَرٰتِ فَاسْلُكِیْ سُبُلَ رَبِّكِ ذُلُلًا ؕ يَخْرُجُ مِنْۢ
بُطُوْنِهَا شَرَابٌ مُّخْتَلِفٌ اَلْوَانُهٗ فِيْهِ شِفَآءٌ لِّلنَّاسِ ؕ اِنَّ فِیْ ذٰلِكَ
لَاٰيَةً لِّقَوْمٍ يَّتَفَكَّرُوْنَ ﴿٦٩﴾ وَاللّٰهُ خَلَقَكُمْ ثُمَّ يَتَوَفّٰىكُمْ ۟ۙ وَمِنْكُمْ مَّنْ
يُّرَدُّ اِلٰۤی اَرْذَلِ الْعُمُرِ لِكَیْ لَا يَعْلَمَ بَعْدَ عِلْمٍ شَيْـًٔا ؕ اِنَّ اللّٰهَ عَلِيْمٌ
قَدِيْرٌ ﴿٧٠﴾ وَاللّٰهُ فَضَّلَ بَعْضَكُمْ عَلٰی بَعْضٍ فِی الرِّزْقِ ۚ فَمَا الَّذِيْنَ ع ٩ ٥ ١٥
فُضِّلُوْا بِرَآدِّیْ رِزْقِهِمْ عَلٰی مَا مَلَكَتْ اَيْمَانُهُمْ فَهُمْ فِيْهِ سَوَآءٌ ؕ اَفَبِنِعْمَةِ
اللّٰهِ يَجْحَدُوْنَ ﴿٧١﴾ وَاللّٰهُ جَعَلَ لَكُمْ مِّنْ اَنْفُسِكُمْ اَزْوَاجًا وَّ
جَعَلَ لَكُمْ مِّنْ اَزْوَاجِكُمْ بَنِيْنَ وَحَفَدَةً وَّرَزَقَكُمْ مِّنَ
الطَّيِّبٰتِ ؕ اَفَبِالْبَاطِلِ يُؤْمِنُوْنَ وَبِنِعْمَتِ اللّٰهِ هُمْ يَكْفُرُوْنَ ﴿٧٢﴾

65. இன்னும், அல்லாஹ் வானத்திலிருந்து நீரை இறக்கிவைத்து , அதைக் கொண்டு பூமியை_ அது உயிரிழந்த பின் உயிர் பெறச்செய்கின்றான்; செவியேற்கும் கூட்டத்தினர்க்கு,நிச்சயமாக இதில் ஓர் அத்தாட்சி இருக்கின்றது.

66. (மனிதர்களே ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற) கால் நடைகளிலும் உங்களுக்கு நிச்சயமாக ஒரு படிப்பினை உண்டு; சாணத்திற்கும், இரத்தத்திற்குமிடையே _ அதன் வயிறுகளிலிருந்து கலப்பற்ற பாலை (உற்பத்தி செய்து, அதை) அருந்துபவர்களுக்கு மிக்க இன்பகரமானதாக இருக்க, நாம் உங்களுக்குப் புகட்டுகிறோம்.

67. பேரீச்சை, திராட்சைகள்(ஆகிய) பழங்களிலிருந்து மதுவையும், அழகான உணவையும் நீங்கள் எடுத்துக்கொள்கிறீர்கள்; நிச்சயமாக இதிலும் அறிகின்ற கூட்டத்தினர்க்கு ஓர் அத்தாட்சி இருக்கின்றது.

68. மேலும், "மலைகளிலும், மரங்களிலும், அவர்கள் கட்டுபவைகளிலும் நீ கூடுகளை அமைத்துக் கொள்" என்று உமதிரட்சகன் தேனீக்கு உள்ளுணர்ச்சியை உண்டாக்கினான்.

69. "பின்னர், நீ எல்லா விதமான கனி(யின் மலர்)களிலிருந்தும் உணவருந்தி, பின்னர், உனதிரட்சகனின் வழிகளில் (அவை உனக்கு) எளிதாக்கப்பட்டதாக இருக்கச் செல்" (எனவும் உணர்வை உமதிரட்சகன்உண்டாக்கினான்). இதனால் அதன் வயிறுகளிலிருந்து (தேனாகிய)ஒரு பானம் வெளியாகின்றது; அதன் நிறங்கள் மாறுபட்டவையாகும்; அதில் மனிதர்களுக்கு குணப்படுத்துதலுண்டு. நிச்சயமாக, இதிலும் சிந்திக்கக்கூடிய கூட்டத்தினர்க்கு ஓர் அத்தாட்சி இருக்கின்றது.

70. இன்னும், அல்லாஹ் உங்களைப் படைத்தான்; பின்னர், அவனே உங்களை மரணிக்கச் செய்கின்றான்; ( கற்று)அறிந்தபின் அவர் ஒன்றுமே அறியாதவராக ஆவதற்காக தளர்ந்த வயது வரையில் (வாழ்வதற்கு) தள்ளப்படுபவர்களும் உங்களில் உண்டு;(உங்களில் யார் யாரை எவ்வளவு காலம் விட்டுவைக்க வேண்டுமென்பதை) நிச்சயமாக அல்லாஹ் நன்கறிந்தவன்; (அவ்வாறு செய்ய) மிக்க ஆற்றலுடையவன்.

71. மேலும், உங்களில் சிலரை, (மற்ற) சிலரைவிடச் சம்பத்தில் அல்லாஹ் மேன்மையாக்கி வைத்திருக்கின்றான்; ஆகவே, அவ்வாறு மேன்மையாக்கப்பட்டவர்கள் தங்கள் சம்பத்தை தங்களது வலக்கரம் சொந்தமாக்கிக் கொண்டவர்(களானஅடிமை)களுக்குஅதில் அவர்கள் (அனைவரும்) சமமானவர்களாக இருக்க, கொடுத்து விடுபவர்களாக இல்லை; ஆகவே, (அல்லாஹ்வினால் படைக்கப்பட்ட அவனின் அடியார்களை அவனுக்குக் கூட்டாக்கி) அல்லாஹ்வின் அருட்கொடையை இவர்கள் மறுக்கிறார்களா?

72. உங்களிலிருந்தே உங்களுக்காக மனைவியரை அல்லாஹ் ஆக்கியுள்ளான்; உங்கள் மனைவியரிலிருந்து ஆண் மக்களையும், பேரக்குழந்தைகளையும் உங்களுக்கு அவன் ஆக்கியுள்ளான்; இன்னும், நல்லவற்றிலிருந்து உங்களுக்கு உணவளித்துள்ளான்; அவர்கள் பொய்யானதை விசுவாசித்து அல்லாஹ்வின் அருட்கொடையையும் நிராகரிக்கின்றனரா?

وَيَعْبُدُوْنَ مِنْ دُوْنِ اللّٰهِ مَا لَا يَمْلِكُ لَهُمْ رِزْقًا مِّنَ
السَّمٰوٰتِ وَالْاَرْضِ شَيْـًٔا وَّلَا يَسْتَطِيْعُوْنَ ﴿٧٣﴾ فَلَا تَضْرِبُوْا
لِلّٰهِ الْاَمْثَالَ ؕ اِنَّ اللّٰهَ يَعْلَمُ وَاَنْتُمْ لَا تَعْلَمُوْنَ ﴿٧٤﴾ ضَرَبَ
اللّٰهُ مَثَلًا عَبْدًا مَّمْلُوْكًا لَّا يَقْدِرُ عَلٰى شَيْءٍ وَّمَنْ رَّزَقْنٰهُ
مِنَّا رِزْقًا حَسَنًا فَهُوَ يُنْفِقُ مِنْهُ سِرًّا وَّجَهْرًا ؕ هَلْ
يَسْتَوٗنَ ؕ اَلْحَمْدُ لِلّٰهِ ؕ بَلْ اَكْثَرُهُمْ لَا يَعْلَمُوْنَ ﴿٧٥﴾ وَضَرَبَ
اللّٰهُ مَثَلًا رَّجُلَيْنِ اَحَدُهُمَاۤ اَبْكَمُ لَا يَقْدِرُ عَلٰى شَيْءٍ وَّهُوَ
كَلٌّ عَلٰى مَوْلٰىهُ ۙ اَيْنَمَا يُوَجِّهْهُّ لَا يَاْتِ بِخَيْرٍ ؕ هَلْ يَسْتَوِيْ
هُوَ ۙ وَمَنْ يَّاْمُرُ بِالْعَدْلِ ۙ وَهُوَ عَلٰى صِرَاطٍ مُّسْتَقِيْمٍ ﴿٧٦﴾ ع ١٠ / ١٦
وَلِلّٰهِ غَيْبُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ ؕ وَمَاۤ اَمْرُ السَّاعَةِ اِلَّا
كَلَمْحِ الْبَصَرِ اَوْ هُوَ اَقْرَبُ ؕ اِنَّ اللّٰهَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ ﴿٧٧﴾
وَاللّٰهُ اَخْرَجَكُمْ مِّنْۢ بُطُوْنِ اُمَّهٰتِكُمْ لَا تَعْلَمُوْنَ شَيْـًٔا ۙ وَّ
جَعَلَ لَكُمُ السَّمْعَ وَالْاَبْصَارَ وَالْاَفْـِٕدَةَ ۙ لَعَلَّكُمْ تَشْكُرُوْنَ ﴿٧٨﴾
اَلَمْ يَرَوْا اِلَى الطَّيْرِ مُسَخَّرٰتٍ فِيْ جَوِّ السَّمَآءِ ؕ مَا يُمْسِكُهُنَّ
اِلَّا اللّٰهُ ؕ اِنَّ فِيْ ذٰلِكَ لَاٰيٰتٍ لِّقَوْمٍ يُّؤْمِنُوْنَ ﴿٧٩﴾

73. மேலும், அல்லாஹ்வையன்றி _ வானங்கள் மற்றும் பூமியிலிருந்துள்ள எப்பொருளையும் இவர்களுக்கு உணவாக அளிக்கச் சொந்தமாக்கிக் கொள்ளாத, இன்னும் (அதற்கு) சக்தி பெறாதவைகளை அவர்கள் வணங்குகிறார்கள்.

74. ஆகவே, அல்லாஹ்வுக்கு நீங்கள் உதாரணங்களைக் கூறாதீர்கள்; நிச்சயமாக அல்லாஹ் (சகலவற்றையும்) அறிவான்; நீங்களோ அறிய மாட்டீர்கள்.

75. எதன் மீதும் ஆற்றல் பெறாத (பிறருக்குச்) சொந்தமாக்கப்பட்ட ஒரு அடிமையையும், நம்மிடமிருந்து அழகான சம்பத்தை நாம் அவருக்கு நல்கியவரையும்(ஆகிய இருவரை) அல்லாஹ் உதாரணமாகக்கூறுகிறான்; (சம்பத்துக்கள் நல்கப்பட்ட)அவர் அவற்றிலிருந்து இரகசியமாகவும், பகிரங்கமாகவும் (தர்மமாகச்) செலவு செய்து வருகிறார்; இ(வ்விரு நிலையுடைய)வர்கள் சமமாவார்களா? (சமமாக மாட்டார்கள்.)புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியன; எனினும், அவர்களில் பெரும்பாலோர் (இதனை) அறிந்து கொள்ளமாட்டார்கள்.

76. மேலும், இரு மனிதரை அல்லாஹ் உதாரணமாகக் கூறுகின்றான் ; அவ்விருவரில் ஒருவன் ஊமை (யான அடிமை); எதன் மீதும் சக்தி பெறமாட்டான்; இன்னும் அவன் தன் எஜமானனுக்குச் சுமையாகவும் இருக்கிறான்; (எஜமானாகிய) அவன், அவனை எங்கு அனுப்பிய போதிலும், யாதொரு நன்மையையும்அவன் கொண்டுவர மாட்டான் ; அவனும், நேரான வழியில் தானும் இருந்து கொண்டு (பிறருக்கு) நீதத்தையே ஏவிக் கொண்டுமிருப்பவனும் சமமாவானா?

77. மேலும்,வானங்கள் மற்றும் பூமியினுடைய மறைவானது அல்லாஹ்வுக்கே உரியதாகும்; ஆகவே, மறுமையின் காரியம் இமை கொட்டி விழிப்பதைப்போல், அல்லது அதைவிட மிகச் சமீபமாகவே தவிர இல்லை ; நிச்சயமாக அல்லாஹ் ஒவ்வொரு பொருளின் மீதும் மிக்க ஆற்றலுடையவன்.

78. அல்லாஹ்தான் ஒன்றையுமே நீங்கள் அறியாதவர்களாக இருந்த நிலைமையில், உங்களுடைய தாய்மார்களின் வயிறுகளிலிருந்து உங்களை வெளிப்படுத்தினான்; அன்றியும், உங்களுக்கு செவிப் புலனையும், பார்வைகளையும், இதயங்களையும்_ நீங்கள் (அவனுக்கு) நன்றி செய்வதற்காக ஆக்கியுள்ளான்.

79. வானவெளியில், (அல்லாஹ்வின் கட்டளைக்குக்) கட்டுப் பட்டவையாக (பறந்துசெல்லும்) பறவைகளை அவர்கள் பார்க்க வில்லையா? அல்லாஹ்வைத்தவிர (வேறொருவரும்) அவற்றை தடுத்து நிறுத்தவில்லை; நிச்சயமாக, விசுவாசங்கொண்ட சமூகத்தார்க்கு இதிலும் பல அத்தாட்சிகள் இருக்கின்றன.

وَاللّٰهُ جَعَلَ لَكُمْ مِّنْۢ بُيُوْتِكُمْ سَكَنًا وَّجَعَلَ لَكُمْ مِّنْ جُلُوْدِ
الْاَنْعَامِ بُيُوْتًا تَسْتَخِفُّوْنَهَا يَوْمَ ظَعْنِكُمْ وَيَوْمَ اِقَامَتِكُمْ ۙ
وَمِنْ اَصْوَافِهَا وَاَوْبَارِهَا وَاَشْعَارِهَآ اَثَاثًا وَّمَتَاعًا
اِلٰى حِيْنٍ ﴿۸۰﴾ وَاللّٰهُ جَعَلَ لَكُمْ مِّمَّا خَلَقَ ظِلٰلًا وَّجَعَلَ لَكُمْ
مِّنَ الْجِبَالِ اَكْنَانًا وَّجَعَلَ لَكُمْ سَرَابِيْلَ تَقِيْكُمُ الْحَرَّ
وَسَرَابِيْلَ تَقِيْكُمْ بَاْسَكُمْ ۭ كَذٰلِكَ يُتِمُّ نِعْمَتَهٗ عَلَيْكُمْ
لَعَلَّكُمْ تُسْلِمُوْنَ ﴿۸۱﴾ فَاِنْ تَوَلَّوْا فَاِنَّمَا عَلَيْكَ الْبَلٰغُ
الْمُبِيْنُ ﴿۸۲﴾ يَعْرِفُوْنَ نِعْمَتَ اللّٰهِ ثُمَّ يُنْكِرُوْنَهَا وَاَكْثَرُهُمُ
الْكٰفِرُوْنَ ﴿۸۳﴾ ع وَيَوْمَ نَبْعَثُ مِنْ كُلِّ اُمَّةٍ شَهِيْدًا ثُمَّ لَا ع ۱۱ ۷ ۱۶
يُؤْذَنُ لِلَّذِيْنَ كَفَرُوْا وَلَا هُمْ يُسْتَعْتَبُوْنَ ﴿۸۴﴾ وَاِذَا رَاَ الَّذِيْنَ
ظَلَمُوا الْعَذَابَ فَلَا يُخَفَّفُ عَنْهُمْ وَلَا هُمْ يُنْظَرُوْنَ ﴿۸۵﴾ وَ
اِذَا رَاَ الَّذِيْنَ اَشْرَكُوْا شُرَكَاۗءَهُمْ قَالُوْا رَبَّنَا هٰٓؤُلَاۗءِ
شُرَكَاۗؤُنَا الَّذِيْنَ كُنَّا نَدْعُوْا مِنْ دُوْنِكَ ۚ فَاَلْقَوْا
اِلَيْهِمُ الْقَوْلَ اِنَّكُمْ لَكٰذِبُوْنَ ﴿۸۶﴾ ج وَاَلْقَوْا اِلَى اللّٰهِ الثلثة
يَوْمَىِٕذِ ۨالسَّلَمَ وَضَلَّ عَنْهُمْ مَّا كَانُوْا يَفْتَرُوْنَ ﴿۸۷﴾

80. மேலும், அல்லாஹ் உங்கள் வீடுகளை உங்களுக்கு அமைதி தரும் இடமாக அமைத்துள்ளான்; உங்கள் பிரயாண நாளிலும்,உங்களுடைய (ஊரில் நீங்கள்) தங்கும் நாளிலும் எளிதாக அவற்றைப் பயன்படுத்த (ஆடு, மாடு, ஒட்டகம் ஆகிய) கால் நடைகளின் தோல்களிலிருந்தும் உங்களுக்கு (கூடாரங்களாக உபயோகிக்கும்) வீடுகளையும் அவன் ஆக்கினான்; அவற்றில் செம்மறியாட்டின் கதகதப்பான உரோமங்கள், ஒட்டகத்தின் உரோமங்கள், வெள்ளாட்டின் உரோமங்கள் ஆகியவற்றிலிருந்து உங்களுக்கு ஆடைகளை(அதை விற்று அதன் மூலம் சாதனங்களை)யும் குறிப்பிட்ட காலம் வரை சுகத்தையும் (அவற்றில் அல்லாஹ் அமைத்துத் தந்திருக்கிறான்.)

81. அல்லாஹ் தான் படைத்திருப்பவைகளிலிருந்து உங்களுக்கு நிழல் (தரக்கூடியவை) களையும் ஆக்கியிருக்கிறான்; மலைகளில் உங்களுக்கு (தங்குமிடங்களாக) குகைகளையும் அவன் ஆக்கியிருக்கிறான்; வெப்பத்திலிருந்து உங்களைக்காக்கக்கூடிய சட்டைகளையும், உங்களுடைய போரில் உங்களைக் காக்கக்கூடிய (கவசங்களையும், உருக்குச்) சட்டைகளையும் உங்களுக்காக அவனே ஆக்கியிருக்கிறான்; நீங்கள் ( அவனுக்கு) முற்றிலும் கீழ்ப்படிந்து நடப்பதற்காக இவ்வாறு அவன் தன் அருளை உங்கள் மீது பூர்த்தியாக்கி இருக்கிறான்.

82. ஆகவே,( நபியே!) அவர்கள் (உம்மைப்) புறக்கணித்தால் ( நீர் கவலைப் படாதீர்; ஏனென்றால்) உம்மீது (கடமையு)ள்ளதெல்லாம் (தூதை) தெளிவாகச் சேர்ப்பிப்பதுதான்.

83. அல்லாஹ்வின் (இத்தகைய) அருட் கொடையை அவர்கள் நன்றாக அறிகின்றனர்; பின்னர் அதனை அவர்கள் நிராகரிக்கின்றனர்; அவர்களில் பெரும்பாலோர் (நன்றி கெட்ட) காஃபிர்களாகவே இருக்கின்றனர்.

84. ஒவ்வொரு சமூகத்தாரிலிருந்தும் ( அவர்களுக்கு) சாட்சியாளரை நாம் எழுப்பும் நாளை( நபியே! நீர் அவர்களுக்கு நினைவூட்டுவீராக!) ; பின்னர் நிராகரித்தோருக்கு (ஏதும் பேச) அனுமதியளிக்கப்பட மாட்டாது; (அவர்களின் இரட்சகனைத் திருப்திப் படுத்தும் எச்செயலையும் செய்ய)அவர்கள் சிரமப் படுத்தப்படவும் மாட்டார்கள் .

85. மேலும், அநியாயம் செய்தார்களே அவர்கள் (மறுமையில்) வேதனையைக் கண்டுவிட்டால் அவர்களைவிட்டும் அ(வ்வதேனையான)து குறைக்கப்பட மாட்டாது; அவர்கள் அவகாசம் அளிக்கப்படவும் மாட்டார்கள்; (துரிதமாக அவர்களை நரகில் சேர்க்கப்படும்).

86. இணைவைத்துக்கொண்டிருந்தோர் தாங்கள் இணையாக்கியவர்களை (மறுமையில்) கண்டால் (அல்லாஹ்விடம்,) "எங்கள் இரட்சகனே! உன்னையன்றி, (வணக்கத்திற்குரியவர்கள் என்று) நாங்கள் அழைத்து (வணங்கி) வந்தோமே அத்தகைய எங்களுடைய இணையாளர்கள் இவர்கள்தான்" என்று கூறுவார் கள்; அப்போது அவர்கள் "நிச்சயமாக நீங்கள் பொய்யர்கள் (நாங்கள் வணக்கத்திற்குரியவர்களல்லர் )" என்ற கூற்றை அவர்கள் பால் போடுவர்.

87. மேலும்,(அந்நாளில்) இவர்கள் அல்லாஹ்வுக்கு முற்றிலும் பணிந்து விடுவதைஎடுத்துவைப்பார்கள்; பின்னர், இவர்கள் (பொய்யாகக்) கற்பனை செய்துகொண்டிருந்தவை அவர்களை விட்டும் மறைந்துவிடும்.

الَّذِيْنَ كَفَرُوْا وَصَدُّوْا عَنْ سَبِيْلِ اللّٰهِ زِدْنٰهُمْ عَذَابًا
فَوْقَ الْعَذَابِ بِمَا كَانُوْا يُفْسِدُوْنَ ﴿٨٨﴾ وَيَوْمَ نَبْعَثُ فِيْ كُلِّ
اُمَّةٍ شَهِيْدًا عَلَيْهِمْ مِّنْ اَنْفُسِهِمْ وَجِئْنَا بِكَ شَهِيْدًا
عَلٰى هٰٓؤُلَآءِ ۭ وَنَزَّلْنَا عَلَيْكَ الْكِتٰبَ تِبْيَانًا لِّكُلِّ شَيْءٍ وَّ
هُدًى وَّرَحْمَةً وَّبُشْرٰى لِلْمُسْلِمِيْنَ ﴿٨٩﴾ اِنَّ اللّٰهَ يَاْمُرُ ١٢ ع ١٨
بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآئِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ
الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ ۚ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ ﴿٩٠﴾ وَ
اَوْفُوْا بِعَهْدِ اللّٰهِ اِذَا عٰهَدْتُّمْ وَلَا تَنْقُضُوا الْاَيْمَانَ
بَعْدَ تَوْكِيْدِهَا وَقَدْ جَعَلْتُمُ اللّٰهَ عَلَيْكُمْ كَفِيْلًا ۭ اِنَّ اللّٰهَ
يَعْلَمُ مَا تَفْعَلُوْنَ ﴿٩١﴾ وَلَا تَكُوْنُوْا كَالَّتِيْ نَقَضَتْ غَزْلَهَا
مِنْۢ بَعْدِ قُوَّةٍ اَنْكَاثًا ۭ تَتَّخِذُوْنَ اَيْمَانَكُمْ دَخَلًۢا بَيْنَكُمْ اَنْ
تَكُوْنَ اُمَّةٌ هِيَ اَرْبٰى مِنْ اُمَّةٍ ۭ اِنَّمَا يَبْلُوْكُمُ اللّٰهُ بِهٖ ۭ وَلَيُبَيِّنَنَّ
لَكُمْ يَوْمَ الْقِيٰمَةِ مَا كُنْتُمْ فِيْهِ تَخْتَلِفُوْنَ ﴿٩٢﴾ وَلَوْ شَآءَ
اللّٰهُ لَجَعَلَكُمْ اُمَّةً وَّاحِدَةً وَّلٰكِنْ يُّضِلُّ مَنْ يَّشَآءُ
وَيَهْدِيْ مَنْ يَّشَآءُ ۭ وَلَتُسْـَٔلُنَّ عَمَّا كُنْتُمْ تَعْمَلُوْنَ ﴿٩٣﴾

88. நிராகரித்து, அல்லாஹ்வுடைய பாதையை விட்டு தடுத்துக் கொண்டுமிருந்தார்களே அத்தகையோர் _ அவர்கள் குழப்பம் செய்துகொண்டிருந்ததன் காரணமாக, வேதனைக்கு மேல் வேதனையை அவர்களுக்கு நாம் அதிகப்படுத்துவோம்.

89. இன்னும், (நபியே!) ஒவ்வொரு சமூதாயத்தினரிலும் அவர்களின் மீது ஒரு சாட்சியாளரை அவர்களிலிருந்தே நாம் எழுப்பும் நாளில், உம்மையும் (உம் சமூகத்தாராகிய) இவர்கள் மீது சாட்சியாளராக நாம் கொண்டு வருவோம்; (நபியே!) ஒவ்வொரு விஷயத்திற்கும் தெளிவாகவும், நேர் வழியாகவும், அருளாகவும், முற்றிலும் தங்களை இரட்சகனிடம் ஒப்படைத்து விட்டவர்களுக்கு நன்மாராயமாகவும் உம்மீது இவ்வேதத்தை நாம் இறக்கி வைத்திருக்கிறோம்.

90. (விசுவாசங்கொண்டோரே!) நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு(பொருளை)க் கொடுக்குமாறும் (உங்களை) ஏவுகிறான்; மேலும், மானக்கேடான காரியங்கள், (மார்க்கத்தில்) மறுக்கப்பட்டவை, வரம்பு மீறுதல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) அவன் விலக்குகிறான். (இவைகளை) நீங்கள் நினைவில் வைத்துக் கொள்வதற்காக அவன் உங்களுக்கு உபதேசிக்கிறான்.

91. இன்னும், நீங்கள் உங்களுக்கு மத்தியில் உடன்படிக்கை செய்து கொண்டால், அல்லாஹ்வின் (பெயரால் செய்யப்பட்ட) உடன்படிக்கையை நிறைவேற்றுங்கள்; சத்தியங்களை அவற்றை உறுதிப்படுத்திய பின்னர், உங்கள் மீது (அவற்றுக்கு) அல்லாஹ்வை பொறுப்பாகவும் நீங்கள் ஆக்கியிருக்க நீங்கள் துண்டித்தும் விடாதீர்கள்; நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்வதை நன்கு அறிவான்.

92. (மனிதர்களே! உறுதிப்படுத்திய உடன் படிக்கைகளையும், சத்தியங்களையும் துண்டிக்கும் விஷயத்தில்) தான் உறுதியாக நெய்தபின் அவள் நெய்ததை பல துண்டுகளாக்கி விட்டவளைப்போன்று நீங்களும் ஆகி விடவேண்டாம்; (அன்றி) ஒரு வகுப்பாரை விட மற்றொரு வகுப்பார் எண்ணிக்கையில் கூடியவர்களாக இருக்கிறார்கள் என்னும் காரணத்தால், உங்கள் சத்தியங்களை ஏமாற்றி மோசடியாக உங்களுக்கிடையில் எடுத்து (ஆக்கி)க் கொள்கிறீர்கள்; அல்லாஹ் உங்களைச் சோதிப்பதெல்லாம் இதைக் கொண்டுதான்; இன்னும், எதில் நீங்கள் கருத்து வேறுபாடு கொண்டிருந்தீர்களோ அதை மறுமைநாளில் நிச்சயமாக அவன், உங்களுக்குத் தெளிவாக்குவான்.

93. மேலும், அல்லாஹ் நாடியிருந்தால், உங்களை ஒரே (மார்க்கத்தைக்கொண்ட) சமுதாயத்தினராக ஆக்கி இருப்பான்; எனினும், தான் நாடியவர்களை தவறான வழியில் அவன் விட்டு விடுகிறான்; இன்னும் தான் நாடியவர்களை நேர் வழியில் செலுத்துகிறான்; மேலும், நீங்கள் செய்துகொண்டிருந்தவை பற்றி நிச்சயமாக நீங்கள் (மறுமையில்) கேட்கப்படுவீர்கள்.

وَلَا تَتَّخِذُوْٓا اَيْمَانَكُمْ دَخَلًاۢ بَيْنَكُمْ فَتَزِلَّ قَدَمٌۢ بَعْدَ
ثُبُوْتِهَا وَتَذُوْقُوا السُّوْٓءَ بِمَا صَدَدْتُّمْ عَنْ سَبِيْلِ اللّٰهِ ۚ وَ
لَكُمْ عَذَابٌ عَظِيْمٌ ﴿۹۴﴾ وَلَا تَشْتَرُوْا بِعَهْدِ اللّٰهِ ثَمَنًا قَلِيْلًا ؕ
اِنَّمَا عِنْدَ اللّٰهِ هُوَ خَيْرٌ لَّكُمْ اِنْ كُنْتُمْ تَعْلَمُوْنَ ﴿۹۵﴾ مَا عِنْدَكُمْ
يَنْفَدُ وَمَا عِنْدَ اللّٰهِ بَاقٍ ؕ وَلَنَجْزِيَنَّ الَّذِيْنَ صَبَرُوْٓا
اَجْرَهُمْ بِاَحْسَنِ مَا كَانُوْا يَعْمَلُوْنَ ﴿۹۶﴾ مَنْ عَمِلَ صَالِحًا
مِّنْ ذَكَرٍ اَوْ اُنْثٰى وَهُوَ مُؤْمِنٌ فَلَنُحْيِيَنَّهٗ حَيٰوةً طَيِّبَةً ۚ
وَلَنَجْزِيَنَّهُمْ اَجْرَهُمْ بِاَحْسَنِ مَا كَانُوْا يَعْمَلُوْنَ ﴿۹۷﴾ فَاِذَا
قَرَاْتَ الْقُرْاٰنَ فَاسْتَعِذْ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ ﴿۹۸﴾
اِنَّهٗ لَيْسَ لَهٗ سُلْطٰنٌ عَلَى الَّذِيْنَ اٰمَنُوْا وَعَلٰى رَبِّهِمْ
يَتَوَكَّلُوْنَ ﴿۹۹﴾ اِنَّمَا سُلْطٰنُهٗ عَلَى الَّذِيْنَ يَتَوَلَّوْنَهٗ وَالَّذِيْنَ
هُمْ بِهٖ مُشْرِكُوْنَ ﴿۱۰۰﴾ ع وَاِذَا بَدَّلْنَآ اٰيَةً مَّكَانَ اٰيَةٍ ۙ وَّ ۱۳ ع ۱۱ ۱۹
اللّٰهُ اَعْلَمُ بِمَا يُنَزِّلُ قَالُوْٓا اِنَّمَآ اَنْتَ مُفْتَرٍ ؕ بَلْ اَكْثَرُهُمْ
لَا يَعْلَمُوْنَ ﴿۱۰۱﴾ قُلْ نَزَّلَهٗ رُوْحُ الْقُدُسِ مِنْ رَّبِّكَ بِالْحَقِّ
لِيُثَبِّتَ الَّذِيْنَ اٰمَنُوْا وَهُدًى وَّبُشْرٰى لِلْمُسْلِمِيْنَ ﴿۱۰۲﴾

94. நீங்கள் உங்களுடைய சத்தியங்களை உங்களுக்கிடையே மோசடியாக ஆக்கிக்கொள்ளாதீர்கள்; (அவ்வாறு செய்தால் உங்களுடைய) பாதம் — அது நிலை பெற்றபின் சறுகிவிடும் ; அன்றியும் அல்லாஹ்வின் பாதையை விட்டும் நீங்கள் (மக்களை) தடுத்ததன் காரணமாக (இம்மையில் பெரும்) துன்பத்தை நீங்கள் சுவைத்துவிடுவீர்கள்; (மறுமையில்) உங்களுக்கு மகத்தான வேதனையும் உண்டு.

95. அல்லாஹ்வுடைய வாக்குறுதிக்குப் பகரமாக சொற்பக் கிரயத்தை நீங்கள் வாங்கிக்கொள்ளாதீர்கள்; நீங்கள் அறிந்தவர்களாக இருந்தால், நிச்சயமாக அல்லாஹ்விடம் இருப்பது — அதுதான் உங்களுக்கு மிகவும் நன்மையானதாக இருக்கும்.

96. உங்களிடமுள்ளவை (யாவும்) தீர்ந்துவிடும்; அல்லாஹ்விடம் உள்ளதோ நிலைத்திருக்கும்; பொறுமையைக் கடைப்பிடித்தோர்க்கு — அவர்களுடைய கூலியை அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றில் மிக அழகானதைக் கொண்டு திண்ணமாக நாம் வழங்குவோம்.

97. ஆண் அல்லது பெண் — அவர் விசுவாசங்கொண்டவராக இருக்க, யார் நற்செயலைச் செய்தாரோ நிச்சயமாக நாம் அவரை நல்ல வாழ்க்கையாக வாழச் செய்வோம்; இன்னும், நிச்சயமாக, அவர்களுக்கு அவர்களது கூலியை அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றில், மிக அழகானதைக் கொண்டு நாம் கொடுப்போம்.

98. (நபியே!) நீர் குர்ஆனை ஓத ஆரம்பித்தால், விரட்டப்பட்ட ஷைத்தானை விட்டும் அல்லாஹ்விடம் காவல் தேடிக் கொள்வீராக!

99. நிச்சயமாக (ஷைத்தானாகிய) அவன் — விசுவாசங்கொண்டு, (தங்கள் காரியங்களை ஒப்படைத்து முழுமையாக) தங்கள் இரட்சகனின் மீது நம்பிக்கையும் வைத்திருக்கிறார்களே அத்தகையவர்களின் மீது (ஷைத்தானாகிய) அவனுக்கு எவ்வித அதிகாரமுமில்லை.

100. அவனுடைய அதிகாரமெல்லாம், அவனை நண்பராக எடுத்துக் கொள்கிறார்களே அத்தகையவர்கள் மீதும், அவனால் இணை வைக்கக் கூடியவர்களாக இருக்கிறார்களே அத்தகையவர்களின் மீதும்தான்.

101. மேலும், (நபியே!) ஒரு வசனத்தை மற்றொரு வசனத்தின் இடத்தில் நாம் மாற்றினால் — அல்லாஹ்வோ தான் இறக்கி வைப்பதை நன்கு அறிந்தவன் — (இந்நிலையில்) இவர்கள் "நிச்சயமாக நீர் இட்டுக்கட்டுபவர்தான்" என்று (உம்மைப் பற்றிக்) கூறுகின்றனர் ; என்றாலும், இவர்களில் பெரும்பாலோர் (உண்மையை) அறிய மாட்டார்கள்.

102. "விசுவாசங்கொண்டோரை உறுதிப் படுத்துவதற்காகவும் , முற்றிலும் கீழ்ப்படிந்து நடப்போருக்கு நேர் வழியாகவும், நன்மாராயமாகவும் இருப்பதற்காக உண்மையைக் கொண்டு இதனை உமதிரட்சகனிடமிருந்து 'ரூஹுல் குத்ஸ்' (என்னும் ஜிப்ரீல்) இறக்கிவைத்தார்" என்று (நபியே!) நீர் கூறுவீராக!

وَلَقَدْ نَعْلَمُ اَنَّهُمْ يَقُوْلُوْنَ اِنَّمَا يُعَلِّمُهٗ بَشَرٌ ؕ لِسَانُ الَّذِیْ
يُلْحِدُوْنَ اِلَيْهِ اَعْجَمِیٌّ وَّهٰذَا لِسَانٌ عَرَبِیٌّ مُّبِيْنٌ ﴿١٠٣﴾
اِنَّ الَّذِيْنَ لَا يُؤْمِنُوْنَ بِاٰيٰتِ اللّٰهِ ۙ لَا يَهْدِيْهِمُ اللّٰهُ وَلَهُمْ
عَذَابٌ اَلِيْمٌ ﴿١٠٤﴾ اِنَّمَا يَفْتَرِی الْكَذِبَ الَّذِيْنَ لَا يُؤْمِنُوْنَ
بِاٰيٰتِ اللّٰهِ ۚ وَاُولٰٓئِكَ هُمُ الْكٰذِبُوْنَ ﴿١٠٥﴾ مَنْ كَفَرَ بِاللّٰهِ مِنْۢ
بَعْدِ اِيْمَانِهٖٓ اِلَّا مَنْ اُكْرِهَ وَقَلْبُهٗ مُطْمَئِنٌّۢ بِالْاِيْمَانِ وَلٰكِنْ
مَّنْ شَرَحَ بِالْكُفْرِ صَدْرًا فَعَلَيْهِمْ غَضَبٌ مِّنَ اللّٰهِ ۚ وَلَهُمْ
عَذَابٌ عَظِيْمٌ ﴿١٠٦﴾ ذٰلِكَ بِاَنَّهُمُ اسْتَحَبُّوا الْحَيٰوةَ الدُّنْيَا
عَلَى الْاٰخِرَةِ ۙ وَاَنَّ اللّٰهَ لَا يَهْدِی الْقَوْمَ الْكٰفِرِيْنَ ﴿١٠٧﴾
اُولٰٓئِكَ الَّذِيْنَ طَبَعَ اللّٰهُ عَلٰی قُلُوْبِهِمْ وَسَمْعِهِمْ وَاَبْصَارِهِمْ ۚ
وَاُولٰٓئِكَ هُمُ الْغٰفِلُوْنَ ﴿١٠٨﴾ لَا جَرَمَ اَنَّهُمْ فِی الْاٰخِرَةِ هُمُ
الْخٰسِرُوْنَ ﴿١٠٩﴾ ثُمَّ اِنَّ رَبَّكَ لِلَّذِيْنَ هَاجَرُوْا مِنْۢ بَعْدِ
مَا فُتِنُوْا ثُمَّ جٰهَدُوْا وَصَبَرُوْٓا ۙ اِنَّ رَبَّكَ مِنْۢ بَعْدِهَا
لَغَفُوْرٌ رَّحِيْمٌ ﴿١١٠﴾ ع يَوْمَ تَاْتِیْ كُلُّ نَفْسٍ تُجَادِلُ عَنْ ع ١٤/٢٠
نَّفْسِهَا وَتُوَفّٰی كُلُّ نَفْسٍ مَّا عَمِلَتْ وَهُمْ لَا يُظْلَمُوْنَ ﴿١١١﴾

103. அவருக்குக் கற்றுக் கொடுப்பதெல்லாம் ஒரு மனிதர் தான் என்று அவர்கள் கூறுவதையும் நிச்சயமாக நாம் அறிவோம்; எவர் பால் (கற்றுத்தந்ததாக) இணைத்துக்கூறுகிறார்களோ அவருடைய மொழி அரபி அல்லாத மொழியாகும்; ஆனால் இவ்வேதமோ மிகத்தெளிவான அரபி மொழியாகும்.

104. நிச்சயமாக அல்லாஹ்வுடைய வசனங்களை விசுவாசிக்கவில்லையே அத்தகையோர்—அவர்களை, அல்லாஹ் நேர் வழியில் செலுத்த மாட்டான். அவர்களுக்குத் துன்புறுத்தும் வேதனையுமுண்டு.

105. நிச்சயமாக பொய்யைக் கற்பனை செய்வதெல்லாம் அல்லாஹ்வுடைய வசனங்களை நம்பாதவர்கள் தாம்; இன்னும், (உண்மையில்) அத்தகையவர்கள் தாம் பொய்யர்கள்.

106. எவர், தாம் விசுவாசங்கொண்ட பின்னர் அல்லாஹ்வை நிராகரித்து விடுகிறாரோ, (அவரின் மீது அல்லாஹ்வின் கோபம் உண்டு; ஆயினும்) எவருடைய உள்ளம் ஈமானைக் கொண்டு அமைதி பெற்றிருக்க (நிராகரிக்குமாறு) நிர்ப்பந்திக்கப்பட்டாரோ அவரைத் தவிர; (அவர் மீது குற்றமில்லை) எனினும், எவர் நெஞ்சத்தை நிராகரிப்பைக் கொண்டு விரிவடையச் செய்து (அதை ஏற்றுக்) கொண்டாரோ — அவர்கள் மீது அல்லாஹ்விடமிருந்துள்ள கோபம் உண்டு; அவர்களுக்கு (மறுமையில்) மகத்தான வேதனையுமுண்டு.

107. அது, நிச்சயமாக அவர்கள் மறுமையைவிட இவ்வுலக வாழ்க்கையையே நேசிக்கிறார்கள் (என்பதாலும்,) மேலும், நிச்சயமாக அல்லாஹ் நிராகரிக்கும் இத்தகைய சமூகத்தாரை நேர் வழியில் செலுத்தமாட்டான் என்ற காரணத்தினாலுமாகும்.

108. அத்தகையோர்தான்— அவர்களுடைய இதயங்களின் மீதும், அவர்களின் செவிப்புலன் மீதும், அவர்களின் பார்வைகள் மீதும் அல்லாஹ் முத்திரையிட்டு விட்டான்; இன்னும், அவர்கள் தாம் மறந்தவர்களாவர்.

109. நிச்சயமாக அவர்கள் தாம் மறுமையில் முற்றிலும் நஷ்டமடைந்தோர் என்பதில் எவ்விதச்சந்தேகமுமில்லை.

110. பின்னர், (நபியே! பகைவர்களால் துன்புறுத்தப்பட்டதால்) சோதனைகளுக்குள்ளாக்கப்பட்டபின் (தங்கள் இல்லங்களைத் துறந்து) ஹிஜ்ரத்துச் செய்து, (வெளியேறி) பின்னர் அறப்போர் செய்து (அதனால் ஏற்படும் துன்பங்களை) பொறுத்துக் கொண்டும் (உறுதியாக) இருந்தார்களே, அவர்களுக்(கருள் புரிவதற்)காகவே நிச்சயமாக உம்முடைய இரட்சகன் இருக்கிறான்; நிச்சயமாக உம்முடைய இரட்சகன் அதற்குப் பின் (அவர்களை) மிக்க மன்னிக்கிறவன்; (அவர்கள் மீது) மிகக்கிருபையுடையவன்.

111. ஒவ்வோர் ஆத்மாவும் தன்னைப் பற்றி அது வாதாட வரும் நாளை, (நபியே! நீர் அவர்களுக்கு நினைவூட்டுவீராக! அந் நாளில்) ஒவ்வோர் ஆத்மாவுக்கும், அது செய்ததற்குரிய (கூலியான)து பூரணமாகக் கொடுக்கப்படும்; அவர்களோ அநியாயம் செய்யப்படமாட்டார்கள்.

وَضَرَبَ اللّٰهُ مَثَلًا قَرْيَةً كَانَتْ اٰمِنَةً مُّطْمَئِنَّةً
يَّاْتِيْهَا رِزْقُهَا رَغَدًا مِّنْ كُلِّ مَكَانٍ فَكَفَرَتْ بِاَنْعُمِ
اللّٰهِ فَاَذَاقَهَا اللّٰهُ لِبَاسَ الْجُوْعِ وَالْخَوْفِ بِمَا كَانُوْا
يَصْنَعُوْنَ ﴿۱۱۲﴾ وَلَقَدْ جَآءَهُمْ رَسُوْلٌ مِّنْهُمْ فَكَذَّبُوْهُ
فَاَخَذَهُمُ الْعَذَابُ وَهُمْ ظٰلِمُوْنَ ﴿۱۱۳﴾ فَكُلُوْا مِمَّا
رَزَقَكُمُ اللّٰهُ حَلٰلًا طَيِّبًا ۪ وَّاشْكُرُوْا نِعْمَتَ اللّٰهِ اِنْ
كُنْتُمْ اِيَّاهُ تَعْبُدُوْنَ ﴿۱۱۴﴾ اِنَّمَا حَرَّمَ عَلَيْكُمُ الْمَيْتَةَ وَ
الدَّمَ وَلَحْمَ الْخِنْزِيْرِ وَمَاۤ اُهِلَّ لِغَيْرِ اللّٰهِ بِهٖ ۚ فَمَنِ
اضْطُرَّ غَيْرَ بَاغٍ وَّلَا عَادٍ فَاِنَّ اللّٰهَ غَفُوْرٌ رَّحِيْمٌ ﴿۱۱۵﴾
وَلَا تَقُوْلُوْا لِمَا تَصِفُ اَلْسِنَتُكُمُ الْكَذِبَ هٰذَا
حَلٰلٌ وَّهٰذَا حَرَامٌ لِّتَفْتَرُوْا عَلَى اللّٰهِ الْكَذِبَ ؕ اِنَّ
الَّذِيْنَ يَفْتَرُوْنَ عَلَى اللّٰهِ الْكَذِبَ لَا يُفْلِحُوْنَ ؕ ﴿۱۱۶﴾
مَتَاعٌ قَلِيْلٌ ۪ وَّلَهُمْ عَذَابٌ اَلِيْمٌ ﴿۱۱۷﴾ وَعَلَى الَّذِيْنَ
هَادُوْا حَرَّمْنَا مَا قَصَصْنَا عَلَيْكَ مِنْ قَبْلُ ۚ وَمَا
ظَلَمْنٰهُمْ وَلٰكِنْ كَانُوْۤا اَنْفُسَهُمْ يَظْلِمُوْنَ ﴿۱۱۸﴾

112. மேலும், அல்லாஹ் ஓர் ஊரை உதாரணமாகக் கூறுகிறான்; அது அச்சமற்றதாக, அமைதியானதாக இருந்தது; அதற்குரிய உணவு(வகைகள்) ஒவ்வொரு திசையிலிருந்தும் அதற்கு தாராளமாக வந்து கொண்டு-மிருந்தது; அல்லாஹ்வுடைய அருட்கொடைகளுக்கு (நன்றி செலுத்தாமல்) அ(வ்வூரான)து மாறு செய்தது; ஆகவே, அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றின் காரணமாக அல்லாஹ் பசி, பயம் என்னும் ஆடையை அதற்கு (அணிவித்து, அவ்வூரார்களை)ச் சுவைக்கச் செய்தான்.

113. மேலும், அவர்களிலிருந்தே (நம்முடைய) ஒரு தூதர் நிச்சயமாக அவர்களிடம் வந்தார்; பின்னர், அவர்கள் அவரைப் பொய்யாக்கிவிட்டனர்; ஆகவே, அவர்கள் அநியாயக்காரர்களாக இருக்கும் நிலையில், அவர்களை வேதனை பிடித்துக் கொண்டது.

114. ஆகவே, அல்லாஹ் உங்களுக்கு அளித்தவற்றிலிருந்து ஆகுமான நல்லவைகளையே புசியுங்கள்; நீங்கள் அவனையே வணங்குவோராக இருந்தால், அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு நீங்கள் நன்றியும் செலுத்திக் கொண்டிருங்கள்.

115. (புசிக்கக் கூடாதென்று) உங்களுக்கு அவன் (ஹராமாக்கி) விலக்கியிருப்பவையெல்லாம் செத்ததையும், இரத்தத்தையும், பன்றியின் மாமிசத்தையும், எதை அல்லாஹ் அல்லாதவருக்காக பெயர் கூறப்பட(்டுவிடப்பட்)டதோ அதையும்தான்; ஆகவே, எவரொருவர் வரம்பு மீறாமலும், பாவம் செய்யும் எண்ணமின்றியும், நிர்ப்பந்திக்கப்பட்டு (இவைகளைப் புசித்து) விட்டால், அப்பொழுது நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிக்கிறவன்; மிகக் கிருபையுடையவன்.

116. அல்லாஹ்வின் மீது பொய்யைக் கற்பனை செய்வதற்காக உங்கள் நாவுகள் பொய்யாக வர்ணிப்பதை, (சில பிராணிகள் பற்றி) இது (ஹலால்) ஆகும், இது (ஹராம்) ஆகாது என்று கூறாதீர்கள்; நிச்சயமாக அல்லாஹ்வின் மீது பொய்யைக் கற்பனை செய்கிறார்களே அவர்கள் வெற்றியடைய மாட்டார்கள்.

117. (இத்தகையோருக்கு இவ்வுலகில்) குறைந்த இன்பம் தான்; (மறுமையில்) அவர்களுக்குத் துன்புறுத்தும் வேதனையுமுண்டு.

118. இன்னும், (நபியே!) முன்னர் நாம் உமக்கு விவரித்தவைகளை, யூதர்களின்மீது நாம் தடுத்து விட்டோம்; நாம் அவர்களுக்கு அநீதமிழைத்துவிடவுமில்லை; எனினும் அவர்கள் தமக்குத் தாமே அநீதமிழைப்பவர்களாக இருந்தனர்.

ثُمَّ اِنَّ رَبَّكَ لِلَّذِیۡنَ عَمِلُوا السُّوۡٓءَ بِجَهَالَةٍ ثُمَّ تَابُوۡا مِنۡ
بَعۡدِ ذٰلِكَ وَاَصۡلَحُوۡۤا اِنَّ رَبَّكَ مِنۡ بَعۡدِهَا لَغَفُوۡرٌ رَّحِیۡمٌ ﴿۱۱۹﴾ ع ١٥/٢١
اِنَّ اِبۡرٰهِیۡمَ كَانَ اُمَّةً قَانِتًا لِّلّٰهِ حَنِیۡفًا ؕ وَلَمۡ یَكُ مِنَ
الۡمُشۡرِكِیۡنَ ﴿۱۲۰﴾ شَاكِرًا لِّاَنۡعُمِهٖ ؕ اِجۡتَبٰىهُ وَهَدٰىهُ اِلٰى صِرَاطٍ
مُّسۡتَقِیۡمٍ ﴿۱۲۱﴾ وَاٰتَیۡنٰهُ فِى الدُّنۡیَا حَسَنَةً ؕ وَاِنَّهٗ فِى الۡاٰخِرَةِ لَمِنَ
الصّٰلِحِیۡنَ ﴿۱۲۲﴾ ؕ ثُمَّ اَوۡحَیۡنَاۤ اِلَیۡكَ اَنِ اتَّبِعۡ مِلَّةَ اِبۡرٰهِیۡمَ حَنِیۡفًا ؕ
وَمَا كَانَ مِنَ الۡمُشۡرِكِیۡنَ ﴿۱۲۳﴾ اِنَّمَا جُعِلَ السَّبۡتُ عَلَى الَّذِیۡنَ
اخۡتَلَفُوۡا فِیۡهِ ؕ وَاِنَّ رَبَّكَ لَیَحۡكُمُ بَیۡنَهُمۡ یَوۡمَ الۡقِیٰمَةِ فِیۡمَا
كَانُوۡا فِیۡهِ یَخۡتَلِفُوۡنَ ﴿۱۲۴﴾ اُدۡعُ اِلٰى سَبِیۡلِ رَبِّكَ بِالۡحِكۡمَةِ
وَالۡمَوۡعِظَةِ الۡحَسَنَةِ وَجَادِلۡهُمۡ بِالَّتِىۡ هِىَ اَحۡسَنُ ؕ اِنَّ
رَبَّكَ هُوَ اَعۡلَمُ بِمَنۡ ضَلَّ عَنۡ سَبِیۡلِهٖ وَهُوَ اَعۡلَمُ بِالۡمُهۡتَدِیۡنَ ﴿۱۲۵﴾
وَاِنۡ عَاقَبۡتُمۡ فَعَاقِبُوۡا بِمِثۡلِ مَا عُوۡقِبۡتُمۡ بِهٖ ؕ وَلَئِنۡ
صَبَرۡتُمۡ لَهُوَ خَیۡرٌ لِّلصّٰبِرِیۡنَ ﴿۱۲۶﴾ وَاصۡبِرۡ وَمَا صَبۡرُكَ اِلَّا بِاللّٰهِ
وَلَا تَحۡزَنۡ عَلَیۡهِمۡ وَلَا تَكُ فِىۡ ضَیۡقٍ مِّمَّا یَمۡكُرُوۡنَ ﴿۱۲۷﴾
اِنَّ اللّٰهَ مَعَ الَّذِیۡنَ اتَّقَوۡا وَّالَّذِیۡنَ هُمۡ مُّحۡسِنُوۡنَ ﴿۱۲۸﴾ ع ١٦/٢٢

119. பிறகு, (நபியே!) நிச்சயமாக உமதிரட்சகன், (எவர்கள் தங்கள்) அறியாமையினால் பாவத்தைச் செய்துவிட்டு, அதற்குப் பின்னர் (அதிலிருந்து விலகி) தவ்பாச் செய்து, (தங்களைச்) சீர் திருத்தியும் கொள்கிறார்களே அத்தகையோருக்(கு மன்னிப்பதற்)காகவே இருக்கிறான்; அதன் பின்னரும் நிச்சயமாக உமதிரட்சகன், மிக்க மன்னிப்பவன்; (அவன்) மிகக் கிருபையுடையவன்.

120. நிச்சயமாக இப்றாஹீம், பின்பற்றப்படும் ஒரு தலைவராகவும், அல்லாஹ்வுக்குப் பயந்து அடிபணிபவராகவும், (இணைவைத்தலை விட்டு முற்றிலும் நீங்கி) ஏகத்துவத்தின்பால் சார்ந்தவராகவும் இருந்தார்; மேலும், இணைவைப்போரில் (ஒருவராக) அவர் இருக்கவில்லை.

121. (அல்லாஹ்வாகிய) அவனின் அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துபவராக (இருந்தார்; அல்லாஹ்வாகிய) அவன், அவரைத் தேர்ந்தெடுத்துக் கொண்டான்; மேலும் அவரை நேரான பாதையில் செலுத்தினான்.

122. மேலும், நாம் அவருக்கு இவ்வுலகில் அழகானதைக்கொடுத்தோம்; மேலும், நிச்சயமாக அவர் மறுமையில் (ஸாலிஹான) நல்லவர்களில் உள்ளவர்.

123. பின்னர், (இணை வைத்தலை விட்டு முற்றிலும் நீங்கி) ஏகத்துவத்தைச் சார்ந்தவரான இப்றாஹீமுடைய (நேரான) மார்க்கத்தை "நீர், பின்பற்றுவீராக!" என்று (நபியே!) உமக்கு நாம் வஹீ அறிவித்தோம். மேலும், அவர் இணைவைத்துக் கொண்டிருப்போரில் உள்ளவராக இருக்கவேயில்லை.

124. சனிக்கிழமை(ஒன்றுகூடும் நாளாக )ஆக்கப்பட்டதெல்லாம், அதைப்பற்றி கருத்து வேறுபாடு கொண்டிருந்தார்களே அவர்களுக்குத்தான்; நிச்சயமாக உமதிரட்சகன்,அவர்களுக்கிடையில்,எதில்அவர்கள்(இம்மையில்)கருத்துவேறுபாடுகொண்டிருந்தார்களோ அதுபற்றி மறுமை நாளில் தீர்ப்பளிப்பான்.

125. (நபியே) நீர் (மனிதர்களை) விவேகத்தைக்கொண்டு, மற்றும் அழகான நல்லுபதேசத்தைக் கொண்டு உமதிரட்சகனின் வழியின்பக்கம் அழைப்பீராக! அன்றியும் எது மிக அழகானதோ, அதைக்கொண்டு அவர்களுடன் நீர் விவாதம் செய்வீராக! நிச்சயமாக உமதிரட்சகன், அவனுடைய வழியிலிருந்து தவறியவரை மிக்கஅறிந்தவன்; இன்னும் நேர்வழி பெற்றவர்களையும் அவன் மிக்க அறிந்தவன்.

126. விசுவாசிகளே! (உங்களைத் துன்புறுத்தியவர்களை)நீங்கள் தண்டிப்பதாக இருந்தால் எந்த அளவிற்கு நீங்கள் தண்டிக்கப்பட்டீர்களோ, அதுபோன்ற அளவிற்கே தண்டியுங்கள்; (தண்டிக்காது) பொறுத்துக்கொள்வீர்களானால், நிச்சயமாக அது பொறுமையாளர்களுக்கு மிகச்சிறந்ததாகும்.

127. இன்னும், (நபியே!) நீர் பொறுமையுடன் இருப்பீராக! இன்னும், உம்முடைய பொறுமை அல்லாஹ்வைக்கொண்டே தவிர இல்லை; அவர்களுக்காக நீர் கவலைப்படவும்வேண்டாம். அவர்கள் செய்யும் சூழ்ச்சிகளைப்பற்றி நீர் இக்கட்டிலும் ஆகிவிடவேண்டாம்.

128. நிச்சயமாக அல்லாஹ், பயபக்தியுடையவர்களாக இருக்கிறார்களே அத்தகையோருடனும், நன்மைகள் செய்கிறார்களே அவர்களுடனும் (உண்மையாகவே)இருக்கின்றான்.